உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பிரமாதீச – ஆவணி – 10—9—73 | இதம் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## சுதந்திரத் திருநாள்

### முழுமைபெரு மகிழ்ச்சி :

கடந்த திங்களில் நமது நாடு தனது சுதந்திரத் திருநாளை அமைதியுடன் கொண்டாடியது. ஆம்! அந்தநாள் திருநாள் தான். அனைவர்க்கும் மகிழ்ச்சிக்குரிய நாள்தான். ஆயினும், 'முழு மகிழ்ச்சிக்குரியதாய் இருந்ததா' என்ற கேள்விக்குரிய தாகவே அது இருந்தது. உணவுப்பொருள் பற்றுக் குறையால் மக்கள்படும் அவதி, அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களின் ஏராள விலையேற்றம், இவை காரணமாக அரசுத் துறையிலும், பிற இடங்களிலும் பணி புரியும் பணியா ளர்களும், மற்றும் தொழிலாளர்களும் செய்யும் கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள் ஆகிய இவை மலிந்துள்ள சூழ் நிலையில், சுதந்திரம் பற்றிய மகிழ்ச்சி மக்களது உள்ளத்தில் முழுமையாக இடம் பெற இயலாமல் போகிறது.

### செந்தமிழ்வேந்தர் செங்கோல் முறைமை :

இக்காலத்தில் பெரும்பான்மையான நாடுகளில் குடியாட்சியே நடைபெறுகின்றது. முடியாட்சி யில்லை. ஒரு சில இடங்களில் முடியாட்சி இருப்பினும், அவை பெயரளவில்தான் முடியாட்சியாய் உள்ளன.

முடியாட்சி தோன்றிய காலத்தில் மன்னர்கள் தங்கள் நலனை விடக் குடிமக்களது நலனையே பெரிதாகக் கருதி அதனைப் பேணிக் காத்தனர். அவருள் ஒருவர் இருவர் மக்கள் நலனைப் புறக்கணிக்கும் நிலையை அடைவார்களாயின், அமைச்சரும், பிற சான்றோரும் அவர்களை இடித்து நல்வழிப்படுத்தினர். இவற்றிற்கு எல்லா நாட்டு இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. தமிழில் அத்தகைய சான்றுகள் பல உள.

பாண்டியன் ஒருவன் 'இதனைச் செய்யாவிடின் இழிநிலை பெறுவேனாக' எனச் சூள் உரைக்குமிடத்து,

" என்நிழல் வாழ்நர் செல்நிழற் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபுறந் தூற்றும் கோலேன் ஆகுக "

என்றான். மற்றொரு பாண்டியன் தான் அறியாது செய்த பிழைக்காக வருந்தி,

" மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள் "

என்று சொல்லி உயிர்விட்டான். பொற்கைப் பாண்டியனது வரலாறு பலரும் அறிந்தது. சேரன் செங்குட்டுவன் அரசர்க்கு உள்ள பொறுப்பினை எண்ணி,

" மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல் "

என்றான்.

## அரசநீதிக்கு அரண்வகுத்த சான்றோர் :

இத்தகைய அரசர் சில வேளைகளில் தம் கடமையில் சோர்ந்திருப்பாராயின், சான்றோர் அவரை இடித்து நெறிப்படுத்தினமையைப் பின்வரும் சில பாடற் பகுதிகளால் அறியலாம்.

" காவல் – குழவிகொள் பவரின் ஓம்புமதி "

" கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே; வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ. "

" நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்;
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே. "

இவைபோன்ற அறிவுரைகட்கு ஏற்ப,

" இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும் "

" அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை "

என்றாற்போலத் தமிழ்நீதிநூல் கூறுவன பல.

இவ்வாறு குடிகளின் நலனையே தங்கள் நலனாக எண்ணி நாட்டைக் கண்ணும் கருத்துமாகக் காத்துவந்த அரசரைக் குடிமக்கள் யாவரும் இறைவனாகவே நினைத்து, அன்பு செலுத்தி வந்தனர்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

என்றார் திருவள்ளுவரும்.

அரசரிடத்தில் பிற்காலத்தில் இந்நிலைமாறித் தங்கள் நலத்தில் கருத்தூன்றிக் குடிகள் நலனை மறக்கும் நிலை ஏற்பட்ட பொழுது, அவர்களிடத்தில் குடிமக்கட்கும் அன்பு குறைந்து, வெறுப்புத் தோன்றுவதாயிற்று. அதனால் ஆங்காங்குப் புரட்சிகள் பல தோன்ற, எங்கும் முடியரசு நீங்கிக் குடியரசே அமையலாயிற்று.

## உரிமைப்போரிட்டோம், கடமை மறந்தோம் :

வேறு சில நாட்டு மக்களைப்போல நாம் நம் நாட்டு முடியரசர்களோடு மோதிப் புரட்சி செய்யவில்லை அயல்நாட்டிலிருந்து வந்து நம்மை அடிமையாக்கிக் கொண்டவர்களிடத்தினின்று விடுதலை பெறவே நாம் போராடினோம். அது மறப் போர் அன்று; குருதி சிந்தா அறப் போர். அதில் நாம் வெற்றியும் பெற்றோம். இன்று நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர். ஆம்! மன்னர்தாம். ஆயினும், நாம் மன்னர்களுக்கு உள்ள கடமையை நினைத்தோமா? தம் நலத்தைப் பெரிதாக நினையாமல், நாட்டு நலத்தைப் பெரிதாக நினைக்க வேண்டுவதுதானே மன்னரது கடமை? அது நம்மிடத்தில் உண்டாயிற்றா? உண்டாகவில்லை என்றால், முன்னைய மன்னரது நிலைமைதானே இன்றைய மன்னராகிய நமக்கும் உண்டாகும்!

## தன்னல அளவும், பொதுநலப் பயனும்

'ஆட்சி' என்பது என்றும் உண்டு. அன்று அதனை முடிமன்னர் அமைத்து ஆண்டனர்; இன்று அதனைக் குடிமன்னராகிய நாம் அமைத்து ஆள்கின்றோம். எனவே முடியாட்சியிற்போலக் குடியாட்சியில் 'மன்னர்' என்று ஒரு சிலர் தனியாக இல்லை. ஆட்சியில் உள்ளவர்களும் குடிமக்களே. ஆகவே. ஒரு நாட்டில் குடியாட்சி நன்கு நடைபெற்றுக் கருதிய பயனைத் தர வேண்டுமாயின், அந்நாட்டுக் குடிமக்கள் பலரிடத்தும் கல்வி, அறிவு என்பவற்றுடன், பொது நலத்திற்கு மாறான தன்னலம் அற்ற தன்மையும் உண்டாக வேண்டும். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று புறநானூறு சொல்கிறது. அதுபோலத் தன் நலத்தையே சிறிதும் கருதாத அவ்வளவு தியாக உணர்வு இல்லாவிடினும், தம் நலத்தை எண்ணும் அதே சமயத்தில் பிறர் நலத்தையும் உடன் கருதும் பான்மை யாவது மக்களிடத்து அமைய வேண்டும்.

ஒன்றும் அறியா மக்கள், பொது நலத்திற்கு உழைப்பது என்றால், அதன் பலன் வேறு யாருக்கோ சென்றுவிடுவது போலவும், அவ்வாறே பொது நலத்தை அழித்தால் அதனால் விளையும் தீங்கும் பிறர் யாருக்கோ உண்டாவது போலவும் நினைக்கின்றார்கள் ஆனால், உண்மை என்ன ? பொது நலத்தின் ஆக்கமும், அழிவும் முடிவில் ஒவ்வொரு தனி மனிதனையும் அடைவனவாகும். எடுத்துக் காட்டாகச் சிலவற்றை எண்ணிப் பார்க்கலாம்.

## நாடு வாழ்ந்தால் கேடு வருமோ ?

சிற்றூர்களுக்குச் செல்லப் புதிய சாலைகளை அமைத்தல், பழைய சாலைகளைச் செப்பம் செய்தல், அவைகளை அடுத்து மரங்களை வளர்த்தல், குளம், கிணறு போன்ற குடிநீர் நிலைகளைச் செம்மையாக வைத்திருத்தல் முதலிய செயல்களுக்கு அவ்வவ்விடங்களிலும் உள்ளவர்கள் தங்கள் உடலாலும், பொருளாலும் இயன்ற அளவு உதவுவார்களாயின், அவற்றால் பின்பு அவர்கள் இருக்குமிடத்திற்கே போக்கு வரவு எளிதில் அமையவும். அதனால் பண்டங்கள் எளிதில் வெளிச்செல்லவும், உள்ளே வரவும் தாங்களும், தங்கள் உறவினர்களும், நண்பர்களும் எளிதில் பயணம் செய்யவும் வாய்ப்பு உண்டாகும். மேலும் இவற்றுக்காக அரசாங்கம் விதிக்கும் வரிகளும் குறையும். மற்றைய ஆக்க வேலைகளையும் எண்ணிப் பார்த்தால், பொது நலம்போலத் தோன்றுபவையெல்லாம் முடிவில் அவரவருடைய தன்னலமாகவே அமைதல் விளங்கும். இத்தகைய செயல்களை நம்முன்னோர் தருமங்கள்' என்று வகுத்து வற்புறுத்தி வந்தார்கள். அவைகளையும் இன்று நாம் மறந்துவிட்டோம். “ நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை ” என்ற நம் பண்டைய அறிவுரை இன்று ஒருவர் காதிலும் விழவில்லை.

## வினைவிதைக்கிறோம், விளைவு நமக்கே !

இனி அழிவை நோக்குமிடத்தும் அதனால் விளையும் தீமைகளும், மீண்டு செய்தவர்களையே வந்து சார்வதாகும். அரசாங்கத்தின் பேருந்துகள், தொடர் வண்டிப் பெட்டிகள், இருப்புப் பாதைகள், புகை வண்டி நிலையங்கள் மற்றும் இவை போல்வனவற்றை அழித்தல் மிக எளிது. ஆனால், அவற்றை அமைப்பது என்பது எவ்வளவு கடினமான காரியம் ! அதற்கு எவ்வளவு பொருள் வேண்டும் ! அவற்றையெல்லாம் யார் கொடுப்பது ? அரசாங்கம் எங்கிருந்து கொடுக்கப்போகின்றது ? மக்கள்தாம் கொடுக்கப்போகிறார்கள். பேருந்தில் 25 காசுக்குப் பயணம் செய்தவர்கள். இந்த அழிவு காரணமாக 50 காசுக்குப் பயணம்

செய்யப் போகிறார்கள். புகைவண்டியிலும் அப்படித்தான். மக்கள் இவைகளை எண்ணிப்பார்க்க வேண்டாமா?

## மாசுபடிந்த மனப்பான்மை :

தன் நல நோக்கம் காரணமாக இன்று நம் மக்களுக்கு உண்டாகியிருக்கும் மனப்பான்மைகள் எத்தகையன! உடல் வருந்த உழைத்தல் கூடாது; ஆனால், பயனைமட்டும் பெற்று விடுதல் வேண்டும்; அல்லது, சிறிது உழைத்துப் பெரிது பயன் பெற வேண்டும். சிறிய முதலீட்டில் பெரிய இலாபம் அடைய வேண்டும். எளிய வாழ்க்கை வாழ்தல் கூடாது; ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டும். இத்தகைய பான்மையன்றோ காணப் படுகின்றது? காரண காரிய முறைப்படி பார்த்தால், இவை எப்படிச் செயல் முறையில் நடைபெறக் கூடும்? அதனால்தான், முதலாளி தொழிலாளிகளுக்கு இடையேயும், ஆட்சியாளர் அலுவலாளர்கட்கு இடையேயும் ஒற்றுமை பற்று, விருப்பம் முதலியன இன்றிக் கிளர்ச்சி வன்முறைச் செயல்கள் இவை எங்கும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. இவைதாம் நாம் சுதந்திரம் பெற்றதன் பயனா?

## தழைத்திட வேண்டின் உழைத்திட வேண்டும் :

இவற்றிற்கெல்லாம் பொறுப்பாக நாம் யாரைக் கூறுவது? நாம் எல்லோருமேதாம் இதற்குப் பொறுப்பு. நேர்மை, அறம், ஒழுங்கு முதலிய எல்லாவற்றினும் மேலாகப் பொருளாதாரத்தின் அடிப்படை உண்மையை ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்து, அதற்கேற்ற வழியிலே நடத்தல் வேண்டும். ஊதியமும், நல் வாழ்வும் உழைப்பினால் பெற இயலுமேயன்றி, வெறும் கிளர்ச்சி களாலும், வன்முறைச் செயல்களாலும் பெற்றுவிட இயலாது.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!
கழப்பின் வாராக் கையறவு உளவோ!"

என்பது பெரியோர் வாக்கு (உறுதி - நன்மை. கையறவு, துன்பம்.)

வெறுங் கிளர்ச்சியால் அப்பொழுது ஏதோ பயன் கிடைத்தது போலத் தோன்றும். ஆனால், வேறு வகையில் அப்பயனுக்கு ஈடான இழப்பு நேரிடும். இது பொருளாதாரத்தின் அடிப்படை. ஆகவே, 'ஊதியம்' என்பது உழைப்பின் வழியாகவே பெறத் தக்கது.

## சுதந்திரப் பயன் இதந்தர வேண்டில்....

குடியாட்சியில் மக்கள் எதனையும் செய்ய முற்படாமல், 'அரசே எல்லாவற்றையும் செய்தல் வேண்டும்' என்று எண்ணு

வது பொருளற்ற ஒன்றாகும். ஏனெனில், குடியாட்சியில் மக்கள் வேறல்ல; அரசு வேறல்ல. மக்களே அரசு; அரசே மக்கள். அதனால், மக்கள் தாங்கள் ஆட்சியில் அமர்த்திய சிலரை அவ் வாட்சியைச் செவ்வனே நடத்த விடவேண்டும். அவ்வாறின்றித் தொல்லை விளைத்தால் அதனை அப்பொழுது தணித்தற்கு ஆட்சி யாளர் எவையேனும் சிலவற்றைச் செய்து மக்களை அமைதிப் படுத்துதல் கூடும். ஆனால், அவை நிலைத்த பயனாய் இருக்க மாட்டா. சுதந்திரம் பெற்ற நம் மக்கள் இவற்றையெல்லாம் நன்கு உணர்தல் வேண்டும். 'சுதந்திரம்' என்றால், உழைக்கா மலே சுகவாசியாய் நன்கு உண்டு உடுத்து வாழ்வது என்று எண்ணிவிடலாகாது. சுதந்திரம் பெறுதற்குமுன்னே இருந்ததை விடச் சுதந்திரம் பெற்ற பிறகு மக்கட்கு மிகுதியான கடமையும், பொறுப்பும் உள்ளன. அவற்றை நம் மக்கள் உணர்ந்தால் தான் நமது சுதந்திரம் உண்மைச் சுதந்திரமாய் இருக்க முடியும் இதை நன்கு எடுத்துக் காட்டும் வகையில் அமைந்தது, தருமை யாதீனத்தில் அண்மையில் நிகழ்ந்த ஆவணி மூலத் திருவிழா. அதில் ஆதீனக் கல்வி நிலைய மாணவர்களில் உழைத்துப் படித்த மாணவர்கள் உயர்ந்த பரிசுகளைப் பெற்றனர்.

### அறநெறி உணர்த்திய ஆண்டவன் திருநாள் :

ஆவணி மூலம், வாதவூரடிகள் பொருட்டு இறைவன் குதிரை கொணர்ந்ததும், வந்தியின் பொருட்டு மண்சுமந்ததும் ஆகிய திருவிளையாடல்களைச் செய்தருளிய சிறந்த நாள். இறை வனது இத்திருவிளையாடல்கள் நாம் மேற்கூறிய உண்மைகளை மிக அழகாகப் புலப்படுத்தியவை. மன்னனது பணத்தை வாதவூரர் இறைவன் அருள்வழி நின்று சிவபுண்ணியச் செயல் களில் செலவிட்டார். எனினும், அதற்கும் இறைவன் அவரைச் சிறிது ஒறுப்பிற்கு உள்ளாக்கியே பின்னர் அருள் புரிந்தான். ஆகவே, அருள்நெறி, மருள்நெறி இரண்டிலும், அறிந்தோ அறியாமலோ தவறு செய்தால், அதற்கு இறைவன் தண்டனை தருதல் திண்ணமாகும். இதனை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் அன்றைய விழாவில் வழங்கிய ஆசியுரையில் குறிப் பிட்டருளினர்கள். இனி இறைவன் தான் வாங்கிய கூலிக்கு வேலை செய்யாதிருந்து, அதன்பொருட்டுத் தானே பிரம்படி பட்டுக் காட்டினான். வாங்கிய கூலிக்குத்தக உழைக்கவில்லை யானால், எவரானாலும் தண்டிக்கத் தக்கவர்களே என்பதை இந் நிகழ்ச்சியின் மூலம் இறைவனே நடித்துக் காட்டியுள்ளான்.

[ தொடர்ச்சி 525 பக்கம் பார்க்க ]

## திருவையாற்றில் வரவேற்பு வழிபாடு :

தருமையாதீனம்

## 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள்

வழங்கியருளிய

# ஆசியுரை

### திருவருள் வாய்ப்பு :

திருக்கயிலாய பரம்பரை என்பதற்கு ஏற்ப நமது கயிலைக் குருமணி அவர்கள் திருக்கயிலாய யாத்திரை மேற்கொண்டு அதனைத் தரிசித்தார்கள். நமக்குக் கயிலாயம்தரிசிக்கும்திருவருள் வாய்ப்பு வாய்க்காவிடினும், அப்பர் பெருமானுக்குத் திருக் கயிலாயக்காட்சி வழங்கிய தென்கயிலாயக்காட்சி-திருவையாற்றுத் தலத்தைத் தரிசிக்கும் திருவருள் வாய்ப்பு, தருமையாதீன அருளாட்சிபெற்றபின் ஒன்றேமுக்கால் ஆண்டிற்குப்பின் இன்று வாய்த்திருக்கிறது.

### விழாச் சிறப்பு :

திருவையாற்றின் சிறப்பினை நீங்கள் அறிவீர்கள். நந்தியெம் பெருமான் அவதரித்து, ஞானோபதேசம்பெற்று, மணங்கொண்ட சிறப்பினையும், ஏழூர்ப்பெருவிழாச்சிறப்பினையும் அறிந்து போற்ற வேண்டும். நந்தியெம்பெருமானது விழாவே இவ்வூர்க்குத் தனிச் சிறப்பு. விழாக்களை அதன் உட்பொருள் தெரிந்து கொண்டாட வேண்டும். விழாக்கள் நம்மையும் நம் உணர்வுகளையும் வளர்க் கவே திருக்கோயில் சார்பில் கொண்டாடப் படுகின்றன. விழா என்றால் (இரவில்) விழித்திருந்து கொண்டாடுவது என்பது பொருள். சைவசித்தாந்தத்தில் உயிர்தங்கும் நிலைகளை ஐந்தாகக் கூறுவது மரபு. அவற்றுள் முதல்நிலை ஜாக்கிரம் எனப்படும். ஜாக்கிரம் என்பது விழிப்பு நிலை. இந்த ஜாக்கிரம் என்பதி லிருந்தே ஜாக்கிரதை என்ற சொல் வருகிறது. எனவே விழா என்பதற்கு விழிப்பாக இருந்து கொண்டாடுவது என்றும் பொருள் கூறலாம்.

விழாக்கள் மக்களின் தகுதிகளுக்குத் தகுந்தாற்போல் பலவகையாகக் கொண்டாடப்பெறும். மாரியம்மன் விழா; கரக ஆட்டம் கஞ்சிவார்த்தல் போன்ற சிற்றூர் விழாக்களும், விழா நிகழ்ச்சிகளும் எளியமக்களுக்கு மகிழ்ச்சி தருவன. ஐயாற்றிற்குச்

சிறப்பான விழா நந்திவிழாவே யாகும், இவைபோன்ற விழாவை அனைவரும் நன்கு உணர்ந்து கொண்டாடவேண்டும். சிவபெருமானுக்கு முதல் சீடர் நந்தியெம்பெருமான், ஆசாரிய அபிடேகம் பெற்றபின்னரே 'அபிடேக நந்தி' எனப்பெற்றார். அவர்வழி உபதேசம் பெற்றவர்களே திருக்கயிலாய பரம்பரையில் வந்த அருளாளர்களும், ஆதீனங்களும் ஆகும்.

பூமி அன்னை :

ஒருமனிதன்தனது நாடு எந்தநாடாயினும், அதனைத்தாயாக-தாய்நாடாகப்போற்றி வணங்கவேண்டும். மண்-நம்மையெல்லாம் பெற்று - போற்றி - வளர்க்கிறது. மண் பெண்ணைப்போன்றது. ஈன்ற தாய்க்கும் தாயாக விளங்குவது பூமி. தாய் ஈன்றெடுத்து ஒரு பருவம் வரை நம்மைப் பாலூட்டி வளர்க்கிறாள் அதற்குப் பிறகு பூமி அன்னை, நெல்லாக, சோளமாக, கம்பாக விளைத்துத் தர அதனை உண்டு வாழ்கின்றோம். உண்மையாக நம்மை வளர்ப்பவள் பூமித்தாய்தான். தாய்போலத் தாய்நாட்டிடமும் பற்று வைக்க வேண்டும்.

பெண்மைச் சிறப்பு :

பெண் உடலாலும், மனத்தாலும் சீலமுடையவளாக விளங்க வேண்டுமென நம் நாட்டினர் அழுத்தமாகச் சொல்லிவைத்தனர். இதன் அழம் புரியாதவர்களில் சிலர் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா என வினா எழுப்புகின்றனர். யாருடைய சீலம் கெட்டால் உலகத்தின் சீலம் கெட்டொழியுமோ அவர்கள் சீலமுடையவர்களாக இருக்கவேண்டுமென நம் முன்னோர்கள் வலியுறுத்தினர். இதனை உளங்கொண்டே பெரியபுராணம் பாட வந்த சேக்கிழார் சிறுத்தொண்டர் வரலாற்றில் அவர்மனைவியார் திருவெண்காட்டு நங்கையைக் குறிக்கும்போது 'மனையறத்தின் வேராக விளங்கும் திருவெண்காட்டு நங்கை' எனக்குறிப்பிட்டார். இல்லற விருட்சத்திற்கே வேராக விளங்குபவர் பெண்கள்.

நாடு வளம்பெற :

இந்தப் பூமாதேவிக்கு ஈன்றெடுத்தபெற்றோர்களுக்கு, நம்மை வாழ்விக்கும் சமுதாயத்திற்கு நம்மால் என்னபயன் என்று ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டும். சிந்தித்தால் இந்த நாடும் வாழும்; நாமும் வாழ்வோம். எந்த ஸ்தாபனமாக இருந்தாலும் அதில் பணியாற்றும் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டுவது ஒன்று உண்டு. ஸ்தாபனத்தால்நாம்உயர்ந்தோம்; நம்மால் ஸ்தாபனத்திற்கு என்னபயன் என்பதைச் சிந்தித்தால்

இந் நாட்டில் நிலவும் பூசல்கள் பிணக்குகள், கட்சித்தாவல்கள் அத்துணையும் நீங்கி நாடு வளம்பெறும் என்பது நிச்சயம். இதையே மறைந்த அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஜான், கென்னடி அவர்களும், 'நாடு உனக்கு என்னசெய்தது என்று கேட்காதே! இந்த நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்பதை முதலில் சிந்தி' எனக் குறிப்பிட்டார்.

## தகுதியைத் தேடினால் :

ஒவ்வொரு மனிதனும் தன் தகுதியை உயர்த்திக்கொள்ள வேண்டும். மகாவித்துவான். மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம், டாக்டர். உ, வே. சாமிநாத ஐயர் அவர்கள் தகுதியான வேலை ஒன்றிற்குச்.சிபாரிசுசெய்யும்படி வேண்டியபோது, பிள்ளை அவர்கள், உன் தகுதியை உயர்த்திக்கொள் - பதவி உன்னைத் தேடிவரும் என்று கூறினார்களாம். இருளை விலக்கவேண்டுமென்றால் விளக்கு ஏற்றுவது ஒன்றே வழி. நம்முடைய அருளாளர்களும் இக் கொள்கைவழி நின்றவர்கள், 'இருக்குமிடந் தேடி என்பசிக்கு அன்னம் உருக்கமுடன் தந்தால் உண்பேன்' என்ற உறுதி அவர்களிடம் காணப்பட்டது தகுதி உயர, உயிர் பண்பட உழைப்பையும் முயற்சியையும் கவனமாகச் செலுத்துதல் வேண்டும். இந்நிலை அரசியல், சமுதாய, ஆன்மீகத்துறையினர் களுக்கும் பொருந்தும்.

தொண்டனுக்கு உள்ள தகுதி தலைவனுக்கும் வேண்டும். கீழிருந்தே மேல் வரவேண்டும். கீழிருந்து மேலே வருபவர்கள் பல நிலைகளிலும் ஈட்டிய அனுபவத்தைத் துணையாகக் கொண்டு உயருகிறார்கள். அப்போதுதான் பலரையும் அனுசரித்து நலஞ்செய்யமுடியும்.

## தொண்டு நெறி :

எல்லோரும் மனிதர்தாம் என்று கருதுவது தவறு. மனிதரிலும் விலங்குகள் உண்டு. சிலருக்கே முழுத் தகுதிகளும் அமைகின்றன. தொண்டு மனப்பான்மையே மனிதனை உயர்த்தும். சிறந்த அடியார்கள்கூட தொண்டு செய்யும் பேற்றினையே இறைவன் பால் வேண்டுகின்றனர். படியாய்க்கிடக்கவும், மீனாய்ப் பிறக்கவும் ஆழ்வார்கள் வேண்டுவதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எங்களைப்போன்ற ஆதீன மகாசந்நிதானங்களுக்கும் உலகைப்பற்றிய கவலைகள் உண்டு! அல்லும் பகலும் அனவரதமும் நாடும் நாட்டு மக்களும் நன்னெறியில் செல்லவேண்டும்

என்பதுதான் அந்தக்கவலை. எங்கள் கவலையும் பிரார்த்தனையும் மக்கட் சமுதாயத்தை நன்னெறிப்படுத்தும் என்பது உறுதி. மனிதன் மனிதனாக வாழவேண்டும் ஏன்? தெய்வமாகவும் வாழலாம் என்பதே அருளாளர்கள் விருப்பம்.

### யார் மனிதன் ?

பிரஞ்சு நாட்டு அறிஞர் ஒருவர் பகலில் விளக்கேற்றிக் கொண்டு தெருவில் எதையோ தேடினார். என்ன தேடுகிறீர்கள் என வினவியபோது, மனிதனைத் தேடுகிறேன் என்றாராம். மனித வடிவம் பெற்றவர்கள் எல்லாம் மனிதர்கள் ஆகிவிடுவதில்லை. இதனையே தொல்காப்பியரும் 'உயர்திணை என்மனார் மக்கள்' எனக் குறிக்காது, 'மக்கள் சுட்டே' எனக் குறித்தார். இராமலிங்க சுவாமிகளும் 'மனிதருள் கல்லுண்டு' ........எனத் தொடங்கி 'மனிதருமுண்டு' என முடித்தார்கள். மனிதர்கள் மற்றவர்களுக்கு உதவிசெய்து வாழவேண்டும். இவ்வுணர்ச்சி இல்லாதவர்கள் மனிதராகமாட்டார்கள்.

### புறமும் - குறளும் :

நல்லது ஒன்றும் செய்ய இயலவில்லை என்றாலும்பரவாயில்லை; தீமை செய்யாதிருத்தலே அறமாகும். இதனை,

> " நல்லது செய்தல் ஆற்றி ராயினும்
> அல்லது செய்தல் ஓம்புமின் "

என்ற புறநானூறு வலியுறுத்திச் சொல்கிறது. அறம் என்பது செய்ய முடியாத கடினமானதல்ல. மனத்தில் மாசில்லாதிருத்தலே அறத்திற்கு அஸ்திவாரம்.

> " மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற "

என்பது திருவள்ளுவர் வாக்கு.

### பணியும் பலனும் :

இங்கே நீங்கள் தந்த வரவேற்பில் நாம் பல பணிகளைச் செய்ததாகக் குறிப்பிட்டீர்கள். இவற்றால் பயனடைந்தது யார் என்று தெரியுமா? பணிகளால் பயனடைந்தது நாம்தாம். பணிகளால் நாம் உயர்ந்தோம். கல்லோடு சேர்த்துத் தீட்டுகிறபோது கத்தி கூர்மை பெறுகிறது. கல் தேய்கிறது. தொண்டு, மனிதர்களை எப்போதும் உயர்த்தவே செய்யும். நாம் இதுவரை செய்த பணிகளால் பல பண்பாடுகள் வளர்ந்தன. சுடச்சுடப் பொன் ஒளிவிடுவதைப்போல், வேலைகளை இயற்ற இயற்ற

அனுபவம் பெருகுகிறது. மாடு முதலிய விலங்குகளும் உழைக்கின்றன. ஆனல் அவை வளர்ச்சியடைவதில்லை. காரணம் அவற்றிற்குப் படிப்பினைகளைப்பெறும் பகுத்தறிவு இல்லை.

### நால்நெறி உண்மை :

தொண்டின் படிமுறை வளர்ச்சியையே நம்முன்னேர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றனர். தொண்டு நிலையில் (சரியை) தொடங்கியே அறிவுநிலை (ஞானம்) பெறவேண்டும். அறிவு வளர்ச்சிக்கு உழைப்பு வேண்டும். சரியை என்பது தொண்டு. கிரியை என்பது தொண்டும் - அறிவும் இணைந்தது. யோகம் என்பது சிறிது உழைப்பும் அறிவு மிகுதியும்கொண்டது. ஞானம் என்பது தூய அறிவுநிலை. எனவே, எல்லா நிலைகளிலும் உழைப்பு இணைந்திருப்பதை நாம் உணரவேண்டும். வஞ்சகமில்லாது உழைக்க ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

### வாழ்த்து :

இன்று இங்கே இப்பெரிய விழாவினை ஏற்பாடு செய்து, வரவேற்பளித்து மகிழ்ந்த அன்பர்கள் அனைவருக்கும் திருவருள் மேலும் மேலும் நிறைந்து நல்ல சிந்தனை கிடைக்க வேண்டி ஐயாறப்பர் அடிமலரைச் சிந்தித்து வாழ்த்துகிறேம். ஐயாறன் அடித்தலம் அனைத்தும் தரும்.

---

[ 520 பக்கத் தொடர்ச்சி ]

இவைகளையெல்லாம் உற்று நோக்கும் பொழுது நேர்மையையும், உழைப்பையும் எவ்வளவு உறுதியாகப் பற்றி ஒழுக வேண்டும் என்பது புலனுகின்றதன்றே !

இவற்றை நம் மக்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடித்து ஒழுகினல், அவரவரும் நலன் அடையலாம். 'வீடு திருந்தினல் நாடு திருந்தும்' என்ற பழமொழிப்படி, தனிமனிதர்களது பண்பாடு நாட்டின் பண்பாடாகி விளங்கும்.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்று திருவள்ளுவர் கூறியது அறிவுக்குமட்டும் அன்று; ஆற்றல், பொருள் அனைத்திற்கும் பொருந்தும். ஆகவே, அன்று தனது அருள் விளையாடலால் அனைவர்க்கும் அறநெறியை உணர்த்திய இறைவன், இன்றும் நம் மக்கள் அறநெறியில் ஒழுக அருள் புரிவானுக.

வீட்டுச் சுதந்திரம் வினைவெலாம் பயப்பதாக
நாட்டுச் சுதந்திரம் நலமெலாம் பயப்பதாக.

## திருச்சிராப்பள்ளியில் வரவேற்பு வழிபாடு :

### தருமையாதீனம்
### 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள்

# அருளாசியுரை

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ"
— திருவாசகம் - 226.

நமது விருப்பம் :

திருச்சிராப்பள்ளிக்குரிய சிறப்பினையும், தருமையாதீனத்திற்கும் - திருச்சிராப்பள்ளிக்கும் உரிய தொடர்புகளையும், ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் அருளினையும் வரவேற்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்! அவற்றுள் நம் சிந்தனையைத் தூண்டிய ஒன்றிரண்டுகருத்துக்களைக் கூறுவதே நமதுவிருப்பம்.

ஆசீர்வாதமாவது யாது ?

திருஞானசம்பந்த சுவாமிகள் 1300 ஆண்டுகளுக்கு முன் இங்கே எழுந்தருளியிருக்கும் பெருமானைத் தரிசித்துப் பாடியுள்ளார். அவர் அருளிய பதிகத்தின் ஒருபாட்டு அனைவருக்கும் பொருத்தமான ஆசீர்வாதமாக அமைகிறது நல்ல கருத்துக்களை நம் உள்ளத்தில் பதியவைப்பதே ஆசீர்வாதம். உயிர்கள் உய்திபெற்று வளர்வதற்கான நல்ல உணர்வுகளைக் கூறும் இத்தலத் தேவாரப் பதிகத்தின் முதற்பாடலில் ஞானசம்பந்தர் இரண்டு விஷயங்களை நமக்காக அருளிச் செய்துள்ளார்.

இறைவனை எத்துணை முயன்றாலும் நாமே சென்று அடைவது என்பது முடியாது. 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பார் மாணிக்கவாசக சுவாமிகள். இக் கருத்தையே ஞானசம்பந்தப் பெருமானும்,

"நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிருமே"

என்று அருளிச்செய்கிறார். இப்பாடலில் திருஞானசம்பந்தர் அருளியிருக்கும் ஆசீர்வாதத்தைப் புரிந்துகொள்வதே இவ் வரவேற்பிற்குப் பயனாக அமையுமென்று கருதுகிறோம்.

இறைவன் நன்மையே நிறைந்தவன் - தீமையே இல்லாத தன்மையன். மனிதர்களில் நன்மையே நிறைந்தவர்கள் எவரும்

இலர். தீமையே செய்யாதவர்களும் உலகில் இல்லை. வெளிப் படையாகச் சிலரிடம் தீமை தெரிவதில்லை. பேச்சிலும், செயலி லும் தீமை காணப்பட்டால் அதனைத் தண்டிக்கச் சட்டங்கள் இருக்கின்றன. நெஞ்சால் தீமை நினைப்பாரைத் தண்டிக்க முடியாது. நமது முன்னோர்கள் சமயம் - சமயம் என ஒன்று வைத்துக் கடவுள் - கடவுள் என்று கூறுவதெல்லாம் நாம் இந் நெஞ்சத் தீமையை மாற்றி உய்திபெறுவதற்கேயாகும்.

நன்றுடையானைத்-தீயதில்லானைப் பெருமான் நான்கண்டு வழிபடற்கென்றே - சிராப்பள்ளிக் குன்றுடையானை எழுந்தருளி யுள்ளான் என்கின்றார் ஞானசம்பந்தர். அவன் அறமே வடி வினனாக - தீமையற்றவனாக விளங்குகின்றான் என்பதற்கு அவன் வாகனமாக இவர்ந்துவரும் காளையே சான்றாகும். அறமே வடிவான காளை அவனுக்கு வாகனமாக அமைவதோடன்றி அவனது கொடியிலும் இடம்பெற்றுள்ளது. இவ்வுயர்ந்த தத்து வத்தை நமக்கு அறிவுறுத்தவே 'நரை வெள்ளேறு ஒன்றுடை யான்' எனப் பிள்ளையார் குறித்தருளுகின்றார்.

ஆண் பெண் பகுப்பு :

உலகம் முழுவதும் ஆணும் பெண்ணுமாக விளங்குவதை ஊடுருவிப் பார்ப்பவர்கள் நன்கு அறியமுடியும். எல்லார் உடலி லும் ஆண் பெண் கூறுபாடு உண்டு. வலப்பாகம் ஆண் தன்மை உடையது; வலியது. இடப்பாகம் பெண்மைக் குரியது; மென் மையானது. இதனை நாம் சிறிதும்உணர்வதில்லை. மின்சாரத்தில் கூட இவ்விரு திறமும் இருக்கிறது. இதனையே 'Passitive' என்றும் 'Negative' என்றும் கூறுகின்றனர். தமிழில் தாங்கும் சக்தி என்றும், பாயும் சக்தி என்றும் இதனை விளக்குவர். இவ் விரண்டு சக்திகள் இல்லாமல் உலகம் இல்லை. ஓர் இரும்பினை வெட்டவேண்டுமானால் ஒரு பட்டையின்மேல் வைத்து வெட்டு கிறோம். அங்கே பட்டை, தாங்கும் சக்தி. மேலிருந்து அடிக்கப் பயன்படும் சுத்தி, பாயும்சக்தியாக அமைகிறது. பெரிய பொருளை எடுக்க இரு கைகள் தேவைப்படுகின்றன. சிறியதாயினும் இரு விரல் சேர்ந்தே ஒன்றினைப் பற்ற இயல்கிறது.

சைவ-சித்தாந்தம் மூன்று பொருள்களைச் சிறப்பாக விளக்கு கிறது. பதி, பசு, பாசம் என்பன அவை. இவற்றையே கடவுள், உயிர், தளை என்றும் கூறலாம். இம் மூன்று பொருளும் ஆண் பெண் என்ற பாகுபாட்டோடு விளங்கிநிற்பதனை ஆழ்ந்து நோக்குபவர்கள் கண்டுகொள்ள முடியும். கடவுள் சிவ - சக்தி யாக விளங்குகிறார். உயிர்கள் ஆண் - பெண் எனப் பாகுபட்டு நிற்கிறது. தளை எனப்படும் அறிவற்ற ஜடம் தாங்கும் சக்தி

பாயும் சக்தி என இருகூறு பட்டு விளங்குகிறது. இவ்வுண்மைகளை எல்லாம் ஆய்ந்தறிந்தே ஞானசம்பந்தர் இத்தலத்திறைவனைப் பாடும்போது 'உமையொரு பாகம் உடையான்' என விளக்கிச் செல்கிறார்.

கருணை வெளிப்பாடு :

அடுத்து ஞானசம்பந்தர் 'சென்றடையாத திருவுடையான்' என இறைவனைக் குறித்தருளுகின்றார். ஆணவ முனைப்பாலோ, உடல் வலியாலோ அறிவுத் திறத்தாலோ இறைவனைச் சென்றடைதல் என்பது முடியாது.

அவன் அருள் இருந்தாலன்றி உயிர்கள் தாமே முயன்று அவன் திருவடிகளைச் சேர்வதென்பது இயலாது. அவ்வருள் எல்லார்க்கும் ஒரு சேரக் கிடைத்துவிடும் என்பதில்லை. உயிர்களின் பக்குவம் அறிந்து இறைவன் அருள் செய்கின்றான். குழந்தையின் தேவையை உணர்ந்து அதற்கு வேண்டுவன செய்யும் தாய்தந்தையரைப் போன்று இறைவனது கருணையும் வெளிப்படுகிறது. சிலவற்றைச் சிலருக்கு இறைவன் தராமைக்குக் காரணம் அவ்வுயிர்கள் பக்குவப்படாமையே ஆகும். நம்முடைய குறைகளையும் குற்றங்களையும் உணரத்தக்க நிலையில் நாம் இல்லை. இதனால்தான் இறைவனது அருளிப்பாட்டினை நம்மால் முற்றும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. இவற்றையெல்லாம் உளங்கொண்டே 'சென்றடையாத திருவுடையான்' என ஞானசம்பந்தர் குறித்தருளுகிறார். எனவே, இத்திருப்பாடலிலிருந்து ஞானசம்பந்தர் அருளும் ஆசீர்வாதமாக நாம் கொள்ளத்தக்கது மனிதர்களுள் தீமையே அற்ற நன்றேயுடையவர்கள் எவருமிலர் என்பது ஒன்று; பிறிதொன்று இறைவன் உயிர்களின் பக்குவமறிந்து அருள்செய்தாலல்லது உயிர்கள் தாமே அவன் அருளை அடைய முடியாது என்பது. இந்த இரண்டு செய்திகளும் நமக்குப் புரிந்துவிடுமானால், உலகியல் குழப்பங்கள் யாவும் தீர்ந்துவிடுமென்பது உறுதி.

உள்ளக்குளிர்ச்சி :

ஒரு நல்ல மனிதரைப்பற்றிப் பேசுவது, நினைப்பது, விழா எடுப்பது யாவுமே மனதிற்குக் குளிர்ச்சி தருவனவாகும். தீயோர்களுக்குச் செய்வதோ நெஞ்சில் எரிச்சலை விளைவிக்கும் என்பது உலகியற்கையாகும். இவற்றை எல்லாம் உள்ளடக்கியே 'சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என் உள்ளம் குளிரும்' என்றார். இறைவன் புகழைப் பேசுவதும் - சிந்திப்பதும் நெஞ்சிற்குக் குளிர்ச்சிதரும் என்பதைச் சொல்லால் விளக்க முடியாது அனுபவத்தால்தான் உணரமுடியும்.

நல்லோர் கடன் :

தீயோர்களிடமிருந்து நல்லோர்களைக் காப்பாற்றவேண்டுவது நல்லவர்கள் அனைவருக்கும் இன்றியமையாக் கடமையாகும். இதனைச் செய்யாவிடில் நான்கு தீயவர்களால் நாலாயிரம் நல்லவர்களுக்குத் தீங்குநேரும்; அவர்களைத் திருத்தி நல்லவர்களாக்க வேண்டுவதும் தேவையேயாகும். காவிரியோடு சாக்கடை கலக்கிறது. காவிரி தன் தூய்மையால் சாக்கடையின் தன்மையை மாற்றிப் புனிதமாக்கி விடுகிறது. நல்லவர்களைத் தீயவர்கள் கெடுக்கவும் முடியாது; என்பது நன்குவிளங்குகிறது.

அர்ச்சகர் நிலை ;

சிவாசாரியர்கள் சார்பில் இங்கே வரவேற்பளிக்கப் பட்டது" ஆரம்பக் காலத்தில் தொண்டாகத் தொடங்கின யாவும் பிற்காலத்தில் தொழிலாக மாறிவிட்டன. வழக்குரைஞர் தொழிலும் ஆரம்பக் காலத்தில் தொண்டாகத் தொடங்கியது. தங்கள் தொழிலுக்காக அவர்கள் ஊதியம் பெறுவதில்லை. அணிந்திருக்கும் பெரிய மேலங்கியில் ஒருபை இருக்கும். கட்சிக்காரர்கள் விரும்பினல் சிறிது தொகையை அப்பையுள் போட்டுவிட்டுப் போவது வழக்கமாக இருந்து வந்தது. இன்றோ அத்தொழில் வருமான நோக்கம் கொண்டதாக மாறிவிட்டது. அதுபோலவே திருக்கோயில்களில் அர்ச்சிக்கும் சிவாசாரியர்களும்தொண்டாகத்தொடங்கியது தற்போது தொழிலாக மாறிவிட்டது, தத்துவ ரீதியில் கோயில்களில் இறைவன் திருமேனியைத் தீண்டி அருச்சிக்கும் சிவாசாரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடாது. 'பிராமணன் சம்பளம் வாங்கினல் 'பிராமணத்வமும் ஆசார்யத்வமும்போய்விடும்' என்று ஒரு நீதி சுலோகம் கூறுகிறது. அவர்களது உலகியல் வாழ்விற்குத் தேவையானவற்றை உணர்ந்து மக்கள் அவர்களுக்கு வழங்கவேண்டும். சிவாசாரியர்கள் பட்டினி கிடப்பது கூடாது. அவர்களைப் பேணுவது நமது கடன். இருசாராரும் கடமையுணர்ச்சியோடுகூடிய தகுதியுடையவர்களாக இருத்தல் அவசியம்.

கடமைப் பகுப்பு :

மக்கள் பணியும் இறைவன் பணியும் ஒன்றே என்று சொல்கின்றனர். இதற்குப் பொருள் என்ன? அவரவர்களும் தத்தமக்குரிய பணிகளை ஒழுங்காகச் செய்யவேண்டும் என்பதேயாகும். சமுதாயத்தில் பலதரப்பட்டவர்களுக்கும் உரிய கடமைகளை ஒரு புறநானூற்றுப் பாடல் அழகாக விளக்குகிறது.

" ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே "

என்ற புறப்பாட்டு ஆழமான கருத்து வளமுடையது. ஆண்டவன் நேரே ஒவ்வொன்றுக்கும் வந்து அருள் செய்வான் என்பதில்லை. ஆற்று நீர் வாய்க்கால்வழி வந்து சிறு கிளைகளாக வந்து மடைவழியாக வயலுள் பாய்வது போல, அவரவர்களும் இயற்றும் கடமை வழியே இறைவன் அனைத்துயிர்களுக்கும் அருள்கின்றான். ஒவ்வொருவரும் தத்தமக்கு இயன்றவகையில் கடமையாற்றவேண்டும். எல்லோரும் ஒழுங்காகக் கடமையைச் செய்தால் சுபிட்சமாக இருக்கலாம். இதுவே 'சோஷலிசம்'. கடமையில் கடவுள் இருக்கிறான். இதனையே நமது புராண இதிகாசங்கள் கதைகளாகக் கூறுகின்றன. ஆனால், அதன் உட்பொருளை நாம் உணர்ந்து கொள்வதில்லை, அகத்தியர் இறைவன் திருமணக்காலத்தில் தென்னாட்டிற்குச் செல்ல இறைவனால் பணிக்கப்பட்டதும், அக்கடமைவழி நின்றார்க்கு இறைவன் இருந்த இடத்தில் மணக்கோலம் காட்டியதும் இதற்குச் சான்று பகர்வனவாகும். பணி யாதாயினும் அதன்மாட்டுச் சிறுமையில்லை. எல்லாப் பணிகளையும் செய்த காந்தியடிகள் பெருமை பெற்றார். பெண்களைப் பொறுத்தவரை கணவன் பணியே அவர்களுக்குக் கடவுள் பணியாகும் என்கிறார் திருவள்ளுவர்.

கருணைவெள்ளம் :

இறைவன் நுட்பமாக - கண்ணுக்குத் தெரியாத நிலையில் இருந்து அருள்கிறான். நாம் செயலற்று இயலாத நிலை அடையும் போது இறைவன் முற்பட்டுக் காத்தருளுகிறான். இறைவன் தந்த உடல் இரும்பினும் வலியது. இரும்புகூட சில ஆண்டுகளுள் துருப்பிடித்துக் கெடுகிறது. பல்லாயிரக்கணக்கான நுண் அணுக்களால் இவ்வுடலை உள்ளிருந்து இயக்குபவன் இறைவன். தாயாகவும் எழுந்தருளிவந்து அருள் வழங்கும் பெருமான் இறைவன். கடமையுணர்வும் பக்தியும் இருக்குமானால் பள்ளத்தை நோக்கிப் பாயும் தண்ணீர்போல இறைவனது கருணைப் பெருவெள்ளம் நம்மிடம் பாய்ந்தோடிவரும்.

வாழ்த்து

அன்போடும், பரிவோடும், ஆர்வத்தோடும் ஒரு தத்துவத்தையும் - சமய ஒழுக்கத்தையும் - மொழியையும்-பண்பாட்டையும் பேணிக்காத்துவரும் ஒரு நிறுவனத்தை நம் உருவத்தில் இன்று இங்கே வரவேற்றுப் பாராட்டிப் போற்றியுள்ளீர்கள் என்றேகருதுகின்றோம்.


இவ்விழாவில் பங்கேற்றுச் சிறந்த அன்பர்களுக்கு நலம்பல பெருகவும், நாடுசெழித்து மக்கள்நிலை உயரவும் வேண்டித் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
புதுவை மாநில ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள், அன்பர்கள் பலரோடும்
திருக்கோயில் வழிபாடு செய்தருளலும்.
பட்டாடைகள் போர்த்திப் பிரசாதங்கள் வழங்கி ஆசி அருளல்

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
ஏழைகளுக்கு எண்ணெயும், உணவுப் பொட்டலங்களும் வழங்கச்செய்தருளல்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில்




புதுவைமாநில ஆளுநர் மேதகு. சேதிலால்
முதலமைச்சர் மாண்புமிகு. பரூக்மரைக்காயர்
அமைச்சர் மாண்புமிகு. இராமச்சந்திரன் ஆகியோர்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத்
தரிசித்து அருளாசி பெறுதல்

திருப்பெண்ணாகடம் மகாகும்பாபிஷேக விழாவில்



திருத்தூங்கானைமாடம் ஸ்ரீ சுடர்க்கொழுந்தீசர்க்குத்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
தம் திருக்கரங்களால்
நவரத்தினங்களிட்டு அஷ்டபந்தனம் சாத்துதல்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
யாகசாலையில்
கும்பாபிஷேகத் திருப்பணியில் பங்குகொண்ட
அன்பர்களுக்கும், காவலர்கட்கும் பட்டாடைகள் போர்த்தி
ஆசி அருளல்

# ஐயாற்றில் அருள்வெள்ளம்

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி

### தருமையாதீன அருளாட்சி :

தென்கயிலாயம் என்று சிறப்பித்துப் போற்றப்பெறும் வரலாற்றுச் சிறப்புடைய பெருந்தலம் திருவையாறு. திருக்கயிலாய பரம்பரையின் முதல் சந்தானாசாரியராகிய திருநந்தி தேவர் அவதரித்த தலம் இது. அறம்வளர்த்த நாயகியுடன் ஐயாறப்பர் எழுந்தருளி அருள்வழங்கும் இத்தலத்திலேதான் சைவ சமய நால்வர் பெருமக்களுள் இரண்டாமவராகிய அப்பர் பெருமான் திருக்கயிலாய தரிசனம் செய்தருளினர்கள். இத்தகு சிறப்புமிக்க திருவையாற்றுத் திருக்கோயில் தருமையாதீன அருளாட்சியில் சிறந்தோங்கி வருவதை சைவ உலகம் நன்கறியும்.

### திருவருளும் குருவருளும் :

தருமையாதீன ஞானபீடத்தில் 26-வது குருமகாசந்நிதான மாக எழுந்தருளியநாள் தொடங்கி ஐயாறப்பன் அடிமலர் பரவ ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிந்தித்த வண்ணமிருந்தார்கள். ஐயாற்றிலும், அதன் சுற்றுப்புறச் சிற்றூர்களிலும் வாழும் ஆயிரக்கணக்கான பேரன்பர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை ஐயாற்றிற்கு அழைத்து, வரவேற்று வழிபாடு செய்திடப் பெருவிருப்பங்கொண்டு பலகாலும் வேண்டியிருந்தனர்.

திருவருளும் குருவருளும் இணைய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 12—8—1973 ஞாயிற்றுக்கிழமையன்று திருவையாற்றுக்கு எழுந்தருளத் திருவுள்ளம்பற்றினர்கள். ஐயாற்று அன்பர்கள் பலரும் அருள் நலம் கொழிக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை வரவேற்கவும், வழிபடவும் விரிவான ஏற்பாடுகளைச் செய்யலானர்கள். திருக்கோயிலும் திருவீதியும் புதுப்பொலிவு பெற்றன. தெருவெலாம் வரவேற்பு வளைவுகள்; மாவிலைத் தோரணங்கள்; பூரணகும்ப மரியாதைகள்; ஐயாறே அருளழகு பூண்டு பொலியலாயிற்று.

### ஏரகத்தில் இனிய வழிபாடு :

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை 7-00 மணி அளவில் தருமையம்பதியிலிருந்து எழுந்தருளினர்கள். ஐயாற்றுக்கு எழுந்தருளும் வழியில் அறுபடை வீடுகளுள் ஒன்ருக

விளங்குவதும், திருஏரகம் என்று ஏத்தப்பெறுவதுமாகிய சுவாமி மலை ஸ்ரீ சுவாமிநாதப்பெருமானைத் தரிசிக்கும் பெருவிருப்போடு காலை 8 மணி அளவில் ஏரகத்திறைவனது திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள்.

நூற்றுக்கணக்கான அன்பர்கள்புடைசூழ, பூரணகும்பம் முதலிய கோயில்மரியாதைகளுடன் சுவாமிமலை ஸ்ரீசுவாமிநாதசுவாமி தேவஸ்தான அறங்காவலர்களும், ஆலயப் பணியாளர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் திருக்கோயில் வாசலில் எதிர்கொண்டு வரவேற்று வணங்கினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சுவாமிநாத சுவாமிக்குப் பொன்னாடை சாத்துவித்து, சண்முகார்ச்சனை நிகழ்வித்துவழிபாடாற்றினார்கள். குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்து அன்பர்களும், கும்பகோணம் நகராட்சித்தலைவர் திரு. இராமதாசு அவர்களும் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டனர். முறையான வழிபாட்டிற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஐயாற்றுக்கு எழுந்தருளினார்கள்.

## பழனத்தார் பாராட்டு :

ஐயாற்றிறைவன் சப்தஸ்தானப் பெருவிழாவில் எழுந்தருளும் ஏழூர்களுள் ஒன்றும், 'பொருப்பரையன் மடப்பிடியின் உடன் புணரும் சிவக்களிறாக' இறைவன் எழுந்தருளி அருள் வழங்குவதுமாயதிருப்பழனத்தில், ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்அவர்கள் எழுந்தருளும் சாலையில், தோரணப்பந்தல் ஒன்றுஅமைத்து நூற்றுக் கணக்கான சைவ நல்லன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்கக் காத்திருந்தனர். காலை 9-00 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஊர்தியைக் கண்டவுடனேயே அரகர...சிவசிவ... என்ற பேரொலி முழக்கத்துடன் அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை வரவேற்று வணங்கினர். திருப்பழனத்து அன்பர்கள் சார்பில் புலவர். திரு. ஆபத்சகாயம் அவர்கள் மாலை அணிவித்து வணங்கினார். திருப்பழனத்துப்பெருமான் அருளிப்பாடாகப் பிரசாதம் பார்த்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தில் திருவையாற்றுக்கு எழுந்தருளினார்கள்.

## எல்லையில் வரவேற்பு :

திருவையாற்று எல்லையில் மிகப் பெரிய வரவேற்புத் தோரணப்பந்தல்ஒன்று அமைக்கப்பெற்றிருந்தது. காலை8மணி முதலே ஆயிரக்கணக்கான அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை

எதிர்கொண்டு வரவேற்கக் காத்திருந்தனர். காலை 10 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஐயாற்று எல்லைக்கு எழுந்தருளியவுடன், திருக்கோயில் சார்பில் பூரண கும்ப வரவேற்பளிக்கப் பெற்றது. அன்பர்கள் பலரும் மலர் மாலைகள் அணிவித்து வணங்கி ஆசிபெற்றனர். ஸ்ரீ ஐயாறப்பர் அருளிப்பாடாகப்பிரசாதம் பார்த்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் எழுந்தருளினார்கள். அலங்கரிக்கப்பெற்ற கோயில் யானை அசைநடையிட்டுச் செல்ல, நாதசுர இசை முழங்க, வாண வேடிக்கை தேவார பாராயணம் முதலியவற்றுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் ஊர் எல்லையினின்றும் கட்டளை மடத்திற்கு எழுந்தருளினார்கள். ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் ஐயாற்றின் திருவீதிகளில் இருமருங்கும் கூடிநின்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வணங்கி ஆசிபெற்றனர். வழியில் திருவையாற்று அரசர்கல்லூரிப் பேராசிரியர், வித்து வான். திரு. சுவர்ணகாளீஸ்வரன் அவர்கள் தமதில்லத்தின் முன்பில் பூரணகும்ப மரியாதைகளோடு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானம் அவர்களை வரவேற்று மாலை அணிவித்து வணங்கி ஆசி பெற்றார்கள்.

காலை 11 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயில் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி சந்நிதியை ஒட்டி அமைந்துள்ள கட்டளைமடத்திற்கு எழுந்தருளினார்கள்.

கொலுக் காட்சி:

கட்டளை மடத்தில் அன்பர்கள் பலருக்கும் தரிசனம் தரவும் அருட்பிரசாதம் வழங்கவும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் கொலுவிற்கு எழுந்தருளினார்கள். திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடே சுவரசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை தவத்திரு. திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள் கொலு வழிபாடு நிகழ்த்தினார்கள்.

அம்மன்கோவில் திருப்பணியாளர்கள் தேவகோட்டை, திரு. மெய். சேவுகஞ்செட்டியார் முதலியோர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு மாலை அணிவித்து காணிக்கை செலுத்தி வணங்கி அருளாசி பெற்றனர்.

ஜமீன்தார் தோட்டம் திரு. அமிது பொன்னாடை காணிக்கை செலுத்தினார்.

திருவையாறு பக்தப் பிரமுகர்கள் சார்பில் திரு. இராதா கிருஷ்ணகாடேராவ் மாலை அணிவித்தார். திருவையாறுஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், அதன் பெருந்தலைவர் திரு. இராமையா சோழகர் மாலை அணிவித்தார். மற்றும், பருத்திக்குடி கிராம வாசிகள், திருப்பழனம் கிராமவாசிகள், விளாங்குடி கிராம வாசிகள், திருவையாறு வார வழிபாட்டுக் கழகம், சைவர் சங்கம் முதலியவற்றின் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்றன.

கொலுக்காட்சி பகல் 12 மணி அளவில் நிறைவேறியது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயில் சிவாசாரியர்கட்கும், பணியாளர்கள் முதலிய அனைவருக்கும் புத்தாடைகள் வழங்கியருளினர்கள். நண்பகல் அன்பர்கள் பக்தர்கள் அடியார்கள் ஆகியோருக்கு மாகேசுரபூஜை சிறப்பாக நடந்தேறியது.

## ஐயாறப்பர் அடிமலர் போற்றல் :

மாலை 6 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயில் வழிபாட்டிற்குப் பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளினர்கள். திருக்கோயில் அழகாகத் தூய்மைப் பொலிவோடும், தோரண அலங்காரங்களோடும் விளங்கியது. ஸ்ரீ விநாயகர் சந்நிதியிலிருந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முறையாக வழிபாடாற்றினர்கள். ஸ்ரீ ஐயாறப்பர் முதலிய இறைவர் திருமேனிகளுக்கு நண்பகலிலேயே சிறப்பு அபிடேகங்கள் நடந்தேறியிருந்தன. ஸ்ரீ ஐயாறப்பர்க்குப் பஞ்சமுகார்ச்சனை நடத்துவித்து பொன்னுடை அணிவித்து, திருவையாற்றுப் பதிகங்கள் முழுதும் ஓதுவித்து வழிபாடு நிகழ்த்திய பின்னர் வரவேற்பு விழாவிற்கு எழுந்தருளினர்கள். திருவையாற்றுத் தலப்பதிகமாகிய மேகராகக்குறிஞ்சிப் பண் பாடத் தொடங்கியதும் பெருமழை பெய்யத்தொடங்கியது.

## வரவேற்புப் பெருவிழா :

திருவையாற்றுப் பெருங்கோயிலில் உள்ள ஸ்ரீ தண்டபாணி மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்க வண்ண மின்விளக்குகளாலும் மகரதோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் விழா மண்டபத்தில் நிறைந்திருந்தனர். மாலை 8 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வரவேற்பு மண்டபத்திற்கு எழுந்தருள விழாத் தொடங்கியது.

திரு. சாமிஜயா தேசிகர் அவர்களும், ஸ்தல ஓதுவாமூர்த்திகளாகிய திரு. முருகையா தேசிகர் அவர்களும் இறைவணக்கம் பாடினர்.

தஞ்சை சரபோஜி மன்னர் வழியினராகிய திரு. இராதா கிருஷ்ண காடேராவ் சாகிப் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை விழாக்குழுவின் சார்பில் வரவேற்று, பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார்கள்.

திருவையாறு நகரப்பஞ்சாயத்து, கூட்டுறவு சிறப்புச் சிற்றங்காடி, கூட்டுறவு வங்கி, மேலமடவிளாகம் நகை வியாபாரிகள் சங்கம் முதலியவற்றின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பெற்றன.

திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அதன் பெருந்தலைவர் திரு இராமையாசோழகர் அவர்கள் பொன்னாடை காணிக்கை செலுத்தினர்.

அடுத்துப் பல்வேறு சமய, இலக்கிய, கலை மன்றங்கள் அமைப்புக்களின் சார்பில் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப் பெற்றன.

வரவேற்றுப் போற்றியோர் :

திருவையாறு சிவாசாரியர்கள் சார்பில் திரு சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களும், திருவையாறு மற்றும் அதன் சுற்றுப்புற மக்கள் இணைந்த வரவேற்புக் குழுவின் சார்பில், தமிழாசிரியர். திரு. ஆபத்சகாயம் அவர்களும் வரவேற்பிதழ்கள் படித்தளித்து மாலைகள் சூட்டி வணங்கினர்.

திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பர் வார வழிபாட்டுக் கழகத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கதர்ப்பட்டாடை அணிவிக்க, தமிழாசிரியர் திரு. இராமராவ் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

விளாங்குடி ஸ்ரீ ஆபத்சகாயம் வார வழிபாட்டுக் கழகச் சார்பிலும், திருவையாறு சைவ - மகாசங்க உறுப்பினர்கள் சார்பிலும் அரசர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. சொர்ணகாளீஸ்வரன் அவர்கள் தனித் தனியே வரவேற்பிதழ் படித்தளித்தார்.

பருத்திக்குடி கிராமவாசிகள் சார்பில், முன்னாள் தலைவர் திரு. சம்பந்த மூப்பனார் அவர்கள் மாலை அணிவித்தார். திரு. குமாரசாமி அவர்கள் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

திங்களூர் ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானத்தின் சார்பில், திரு. ஆபத்சகாயம் அவர்கள் வரவேற்பிதழ் வாசித் தளித்து மாலை சூட்டினர்.

புனவாயில் ஸ்ரீ ரேணுகாதேவி ஆலய தருமகருத்தர் திரு கந்தசாமிப்பிள்ளை அவர்கள் வரவேற்பிதழ் படித்தளித்து மாலை அணிவித்தார்.

இறுதியாகத் திருவையாறு திருத்தொண்டர்கள் சார்பில், நிருபர். திரு. வெங்கட்ராமன் அவர்கள் வரவேற்பிதழ் படித் தளித்தார்.

அன்பர் பணிவுரை :

வரவேற்பு விழா நிகழ்ச்சியின் இறுதியில், வரவேற்புக் குழுவின் சார்பில், அதில் முக்கியப் பங்குவகித்த அன்பர் புலவர் திரு. ஆபத்சகாயம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிய பெருங்கருணையை வியந்து போற்றுங் கால்,

“ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் தொண்டுநெறியால் உயர்ந்தவர்கள்; தூய்மைமிக்கவர்கள். ஐயாற்றில் அவர்கள் செய்தபணி அளவிடற்கரியது. ஐயாற்றை நினைக்கும்போதெல் லாம் அவர்கள் நினைவும் ஒன்றுகவே இணைந்து எழுவதிலிருந்தே திருவையாற்றோடு அவர்களுக்கிருந்த பிரிக்க முடியாத நெருக்கமான தொடர்பை அறிய முடிகிறது. சிவாலயத் தொண்டுக்கென்றே தம்மை அற்பணித்துக்கொண்ட உத்தமர் அவர்கள். எல்லா மாவட்டங்களிலும் அவர்கள் தொண்டினை அன்பர்கள் போற்றிப் பாராட்டியுள்ளனர். ஆயிரக்கணக்கான உயிர்களை உய்வித்துத் திருத்தி நல்வழிக்குக் கொண்டுவந்த அரியசெயலைச் சென்னையில் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். நூற்றுக்கணக்கான அன்பர்களைத் தல யாத்திரைகளுள் ஈடு படுத்தி, ஆன்மா உய்திபெற வழிகாட்டியருளியவர்கள். இத்தகு அருளாளர் நமது நகரத்திற்கு இன்று எழுந்தருளியது நமது பாக்கியமாகும். அவர்கள் திருவடி பட்டவுடனேயே இன்று இங்கே பெருமழை பெய்கிறது. இதனை அவர்களது அருள் வெள்ளமாகவே கருதவேண்டியுள்ளது. தவவேந்தர்கள் வர மழை பொழியுமானல் அது புண்ணியத்தின் அறிகுறி. இத்தகு புண்ணியசீலராக விளங்கும் அவர்களை இங்கே வரவேற்கவும், பாராட்டவும் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பு நமது முன்னோர் செய்த புண்ணியத்தின் பயன் என்றே கருதுகின்றேன்” என்று

குறிப்பிட்டார். விழா நிகழ்ச்சியின் இறுதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அன்பர்களிடையே, வரவேற்பிற்கு வாழ்த்துத் தெரிவித்து அருள்நலம் கொழிக்கும் அருளுரை வழங்கியருளினார்கள்.

(ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுரை தனியே வெளியிடப் பெற்றுள்ளது).

இறுதியாக இவ்விழாவில் முக்கிய பங்கு வகித்த அன்பர்கள் பலருக்கும் நற்றொண்டாற்றிவரும் சங்கங்களின் தலைவர்களுக்கும் பட்டாடைகள் போர்த்தி ஆசியருளினார்கள். நன்றியுரையும் வாழ்த்தும் நிகழ்ந்தபின் இரவு 10 மணி அளவில் வரவேற்பு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுற்றன.

### அம்மை வழிபாடு :

பின்னர், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆட்கொண்டார் திருக்கோயில், தென்கயிலாயம் வடகயிலாயம், முதலிய சுற்றுக்கோயில்களைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சந்நிதிக்கு வலமாக எழுந்தருளினார்கள். அம்மை சந்தனக்காப்பு அலங்காரம் பூண்டு 'அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக' அருட்காட்சி வழங்கினாள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அம்மைக்கு நவசக்தி அர்ச்சனை நிகழ்த்துவித்து முறையான வழிபாடாற்றினார்கள்.

### அருள்வெள்ளம் :

வழிபாடுகள் யாவும் நிறைவெய்தியபின் கட்டளை மடத்திற்கு எழுந்தருளி அன்பர்கள் பலருக்கும் 'திருவருட் பிரசாதம்' வழங்கியருளினார்கள்.

காலை முதல், இரவு வரை ஐயாற்றிலும், அதன் சுற்றுப்புறச் சிற்றூர்களிலிருந்தும் ஆயிரம் ஆயிரம் அன்பர்கள் வந்து ஸ்ரீ ஐயாறப்பன் அடிமலர் தொழுதும், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடி பணிந்தும் திருவருளும், குருவருளும் பெற்றுய்ந்தனர். ஐயாற்றில் அருள்வெள்ளம் காவிரி போல் பெருக்கெடுத்துப் பாய்ந்தமையை அன்பர்கள் நேரில் கண்டு உணர்ந்து போற்றினர்.

# விளக்கை விளக்கும் விளக்கு

**நீதிபதி, கனம். S. மகராஜன் B. A, B. L,**

மனித உணர்ச்சிகளை அப்படி அப்படியே எடுத்துச் சொல்லுவதற்கு மனித மொழிக்குப் போதிய ஆற்றல் ஏற்படவில்லை. கேவலம் வயிற்று வலியை எடுத்துக்கொள்வோம். அதன் பம்மல்கள், பாய்ச்சல்கள், துள்ளல்களையெல்லாம் சொல்லாலே விளக்க முடிவதில்லை. நல்ல வேளையாக டாக்டருக்கும் நம்முடைய அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், "வயிற்று வலி" என்று சொன்னவுடனே, அவருக்கு நம்முடைய நோய்க்கூறு விளங்கிவிடுகிறது. தகுந்த மருந்தைக் கொடுத்து, எப்படியோ குணப்படுத்திவிடுகிறார்.

காலத்துக்கும் இடத்துக்கும் கட்டுப்பட்ட வயிற்றுவலி அனுபவத்தையே சொல்லினால் நமக்கு வருணிக்க முடியவில்லையென்றால், காலத்தையும் இடத்தையும் கடந்துநிற்கும் அனுபவங்களைப் பற்றி எப்படிச் சொல்லுவது ?

அனுபவப் பாதையிலே சென்ற நம் ஞானிகள் இந்தப் பிரச்சினையை எவ்வாறு சமாளித்திருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

அவர்கள் செய்த முதற்காரியம் என்னவென்றால், இளைச்சுப்போன உரை நடையை ஒதுக்கிவிட்டு, உணர்ச்சி ததும்பும் கவிச்சொல்லிலே பேசினார்கள், மேளதாளங்களோடு கவி பேசும் போது, வெற்றுச் சொல்லுக்கில்லாத திறமையும் வேகமும் அதற்கு ஏற்பட்டுவிடுகிறது.

"பேச்சுமூச்சற்று பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணமல் நிற்கும்நாள் எந்நாளோ ?

என்று சொல்லி ஏங்குகிறார் தாயுமானவர். வெள்ளத்தைப் பார்த்திருக்கிறோம்; அதில் நழுவி விழுந்து நீச்சு நிலை காணமல் தத்தளித்திருக்கிறோம் : பேச்சுமூச்சில்லாமல் திக்குமுக்காடியிருக்கிறோம். இந்த அனுபவத்தைக்கொண்டு பேசரிய பேரின்ப அனுபவத்தை ஜாடையாகக் காட்டிவிடுகிறார் கவிஞர்.

"பேச்சுமூச்சற்ற பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணமல் நிற்கும்நாள் எந்நாளோ""

சில ரகசியங்களை வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிட்டால், மக்கள் அவற்றை மதிக்காமல் போய்விடுவார்களோ என்ற அச்சம் நம் ஞானிகளுக்கிருந்திருக்கிறது. ஆகவேதான், உண்மைகளைப் பாதி மறைத்தும் பாதி மறைக்காமலும், குறியீடுகள் மூலம் சுட்டிக்காட்டுகிறார்கள். அவர்கள் சொல்லினால் போடும் முடிச்சுகளை குருவின் உதவியில்லாமல், அவிழ்க்க முடியாது.

உதாரணமாக, ஞானப்பயிற்சியொன்றை சிவவாக்கியர் எப்படி விவரிக்கிறார் என்று பார்ப்போம்.

"மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலுகட் டறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்ம மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே"

மிகுந்த நிச்சயத்தோடு அம்மையப்பர் பாதத்தில் அடித்து சத்தியம் பண்ணிக் கொடுக்கிறார் சிவவாக்கியர். ஆனால், மூலமாகிய குளம் எங்கே இந்த உடலில் இருக்கிறது? குளத்தில் முளைத்தெழுந்த கோரை எது? அதில் நாலு கட்டு அறுப்பது எப்படி? அறுத்தால் எவ்வாறு பரப்பிரம்மம் ஆகலாம் என்பதெல்லாம், கேவலம் புலமையினால் அறியக்கூடிய காரியங்கள் அல்ல.

இதைப் போலவே, பாம்பாட்டிச் சித்தர் சொல்லினால் செய்கிற நெசவும், நம்மைத் திணறடிக்கிறது.

"வடக்கும் கிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ் சுழலிலே பாவு பூட்டுவோம்
நடக்கும் வழியிலே யுண்டை சேர்ப்போம்
நடவா வழியிலே புடைவை நெய்வோம்"

என்று பெருமிதத்தோடு அவர் பாடுகிறார். "நடவாவழியிலே எப்படிப் புடைவை நெய்வது?" என்று நாம் புருவத்தை நெரித்துக்கொண்டிருக்கும் போது, இடைக்காட்டுச் சித்தர்,

"வெட்ட வெளிக்குள்ளே பால்கற"

என்று ஒரு போடு போடுகிறார். சித்தர்கள்தான் இப்படியெல்லாம் சொல் மரபைச் சிதறடிக்கிறார்கள், சொல்லைத் தாறுமாறாய்ப் பயன்படுத்துகிறார்கள் என்று நினைப்பது தவறு. ஞானப் பாதையில் நடந்த கவிஞர்கள் எல்லோருமே, திருமூலரிலிருந்து

ராமலிங்க அடிகள் வரை, இந்தப் பொல்லாத பிரவர்த்தியில் ஈடுபடுகிறார்கள்.

“ஆறுதெருவில் அகப்பட்ட சந்தியில்,
சாறுபடுவன நான்கு பனையுள;
ஏறற்கரியதோர் ஏணியிட்டு, அப்பனை
ஏறலுற்றேன்; கடல் ஏழுங்கண்டேனே!”

என்று முழங்குகிறார் திருமூலர். அவர் ஏறிய ஏணி மேல் ஏறிக் கடல் ஏழையும் அதாவது ஏழு நிலைகளையும் கண்டிருக்கிறார் ராமலிங்க அடிகளும். ஆனால், தான் கண்ட காட்சியை அடிகள் விவரிக்கும் முறை வேறு.

“சோதி மலையொன்று தோன்றிற்று, அதிலொரு
வீதி யுண்டாச்சுதடி — அம்மா
வீதி யுண்டாச்சுதடி.”

அந்த வீதியில் செல்லும்போது வீதியின் நடுவே, ஒரு மேடையைக் கண்டார். அந்த மேடைமேலேறினால், ஒரு கூடம்;

“கூடத்தை நாட, அக்கூடம்மேல் ஏழ்நிலை
மாடமிருந்ததடி — அம்மா!
மாடமிருந்ததடி.”

ஒவ்வொரு நிலையிலும் ஒரு அற்புதக் காட்சியைக் கண்டார்; கருநிலம் செய்ய பவளமாயிற்று; மரகதம் பச்சை செம்மாணிக்கமாயிற்று; பெருமுத்துவச்சிரம் பேர்மணியாயிற்று; பவளத்திரள் வெண்மணியாயிற்று; பன்மணி பொன்மணியாகவும், பகர்மணி படிகமாகவும் ஆயிற்று என்று சொல்லிக் கூத்தாடுகிறார் ராமலிங்க ஸ்வாமிகள். அவருடைய அனுபவத்திலே அவருக்கு எவ்வளவு நிச்சயமும் தெளிவும் இருக்கிறது என்பதற்கு அவருடைய பாடலே சாட்சி. ஆனால், பாடலைப் படிப்பவர்களுக்குப் பொருள் எளிதா விளங்குவதில்லை. “புலன் அறிவே அறிவு” என்றிருக்கும் நமக்குப் புலனுக்கு எட்டாத அனுபவங்களை ஞானிகள் எடுத்து விளக்க வேண்டியிருக்கிறது. அதுவும் நம்முடைய பொய்மை மிகுந்த சொல்லிலும், மொழியிலும் விளக்க வேண்டியிருக்கிறது; நம்முடைய மொழியோ மாசு நிறைந்தது; ஒன்றாகக் காணும் ஆற்றல் அற்றது, பேதம் நிறைந்தது; நான் என்றும் நீயென்றும் அவன் என்றும் சொல்லிச் சொல்லி பேதத்தைப் பெருக்கி மயக்கத்தை வளர்ப்பது. பேதமற்ற காட்சியைப் பேதம் நிறைந்த சொற்களில் எப்படிச் சொல்லுவது?

சொல்லைத் தறித்து, முறித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டால் நமக்கு ஒரு அதிர்ச்சி ஏற்படுமல்லவா? அந்த அதிர்ச்சியிலே நம்முடைய புலன் மரபு கெட்டு, ஆணவம் தடுமாறி உண்மைக் காட்சியைக்கூட ஒரு வகையாக நாம் உணர்ந்துவிடலாம் என்று ஞானிகள் எதிர்பார்க்கிருர்கள். சக்கிமுக்கிக் கல்லை உரைசி, தீ உண்டாக்குவதுபோல, சொல்லோடு சொல்லை எப்படித் திருமூலர் உரைசுகிருர் என்று பாருங்கள்.

“ எழுதாத புத்தகத்தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந்தோத
மலராத மொட்டின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே ”

என்பது திருமந்திரம். எழுதாத புத்தகத்துக்கு ஏடேது, பொருளேது? தெருளாத, அதாவது, தெளிவில்லாத கன்னி எப்படித் தெளிந்திருந்து ஓதினள்? மலராத மொட்டுக்கு, மணமேது, மதுவேது? பிறவாத வண்டு, மணத்தையாவது, உண்பதாவது! இப்படி இடக்குத்தனமாகச் சொல்லையாண்ட தமிழ்க் கவிஞர்கள் வேறொருவருமே இல்லை—திருமூலரைத்தவிர. சொல்லதிர, நம் மனமதிர இப்படியெல்லாம் பேசிவிட்டு, “ நல்ல குருவை நாடிக் கேள். பொருள் விளங்கிவிடும் ” என்று சொல்லி நமக்கு ஆறுதல் வேறு கொடுக்கிருர் திருமூலர்.

இப்படி அவர் உபதேசம் செய்யும் போதே, சொல்லை வைத்து ஒரு விளையாட்டு விளையாடுகிருர். “ பேருண்மை என்ற விளக்கு இருக்கிறதே, அது கோடி சூரியப் பிரகாசத்தோடு ஒளி விசிக்கொண்டு நிற்கிறது. ஆனல், அது உங்கள் குருட்டுக் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. உங்களுக்கு அந்த உண்மையைக் காட்டுவதற்காகவே தீவட்டி வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கிருர்கள் குருமார்கள். அவர்கள் விளக்கினல், விளக்குக்குடையவனுகிய இறைவன் உங்கள் கண்ணுக்கும் காட்சியளிப்பான், ” என்று சொல்லுகிருர். ஆனல், இப்படியா சுவையில்லாமல் அவர் சொல்லுவார்!

“ விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில், விளங்கும் விளக்கவர்தாமே ”

என்று பாடுகிருர்.

ஆசான் மூலமாக அறிய வேண்டிய இரகசியங்களுக்குத் தான் மூடாக்குப் போடுவார்கள் நம் ஞானிகள். ஆனல், ஆன்ம உலகத்தில் அவர்கள் கண்ட அடிப்படை உண்மைகளை, முடிந்த

முடிபுகளை, சித்தாந்தத்தை மனந்திறந்து வாய்விட்டுப் பேசுகிருர்கள்.

மனிதனுக்குத் துன்பத்தைத் தருவது அவனுடைய ஆணவமே—" நான் " என்ற மயக்கமே. அந்த மயக்கத்தி லிருந்து விடுதலையடைந்தவுடனேயே, அவனுக்கு ஆனந்தம் கைகூடிவிடுகிறது.

பரம்பொருளானதுபேரண்டம்முழுவதுமேமுட்டித்ததும்பிக் கொண்டு நிற்கிறது; ஒவ்வொரு அணுவுக்குள்ளும் தோய்ந்து நிற்கிறது. அதை விட்டு நீங்கித் தோயாமலும் நிற்கிறது. அந்தப் பரவஸ்துக்குள்ளே பேதம் என்பதே கிடையாது, ஒரே தன்மைத்தானது அது. இந்த வஸ்துவுக்குள்ளே ஆணவம் என்ற விதை எப்படியோ விழுந்தது. அது முளைவிட்டு, வளர்ந்து, கப்புங்கவருமாகச் செழித்தோங்கி அந்தப் பரவஸ்து வையே மறைத்துக்கொண்டு நிற்கிறது. இந்த வேடிக்கையை உணர்பவனே ஞானி. உணர்ந்த மாத்திரத்தில், அவனுடைய ஆணவம், ஆங்காரம் எல்லாம் மடிந்துவிடுகிறது. ஆணவத்தி லிருக்கும் போது எட்டாக் கனியாக இருந்த பேரின்பம் அவனுக்கு எட்டிவிடுகிறது. இந்த உண்மையைப் பட்டினத்தார் உணர்ந்து அனுபவித்துப் பாடுகிருர் :-

" ஓங்கார மாய்நின்ற வஸ்து விலேயொரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தாற் பதினுலுலகும்
நீங்காமல் நீங்கி, நிறையா நிறைந்து நிறையுருவாய்
ஆங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே."

சித்தாந்தப் பாதையிலே சென்ற ஞானிகள் தம்முடைய அனு பவங்களை என்றும் இறவாத பாடல்களிலே பொதிந்து நமக்குத் தந்துவிட்டுப்போயிருக்கிருர்கள் உணர்வுடையவர்கள் படித்துப் பயன்பெறலாம்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

" ஐயாறு ஆலய வழிபாடு மனதுக்கு நிறைவையும் ஆனந்தத் தையும் தந்தது. கோயில் தூய்மையாக இருக்கிறது மனத்தைக் கவர்ந்தது."

7—9—73. (ஒ-ம்.) ம. பொ. சிவஞானம்.

# திருச்சிராப்பள்ளியில் திருவருட்பெருக்கு

( இரா. செ. )

**தருமையும் திருச்சியும் :**

செந்தமிழ் விளக்கும் சிவஞானப் பண்ணையாக விளங்குவது நமது தருமையாதீனம். தருமையாதீனத்தின் வரலாற்றோடு முன்னூறு ஆண்டுகளுக்கு மேலான தொடர்பூண்டு விளங்குவது திருச்சிராப்பள்ளி. இத்தலத்து மலைக்கோயிலுள் இறைவன் தந்தையாக இருந்து அருள்புரிவதோடன்றித் தாயாகவும் இருந்து அருள்பாலிக்கின்றான். இம்மலையில் திருமூலர் மரபில் வந்த ஸ்ரீ சாரமாமுனிவர் வழியில் 17வது பட்டமாக எழுந்தருளி இருந்து தாயுமான அடிகள் போன்ற பக்குவிகளுக்கு ஞான குருவாக விளங்கிய பெருஞ்சிறப்புடையவர் ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் ஆவார்கள். தாம் பரிபூரணம் எய்தும் நிலையில் தமது திருமடத்தின் பொறுப்பைத் தருமையாதீன அருளாட்சிக்கு உட்படுத்தியருளினார்கள். அன்று தொடங்கி திருச்சிராப்பள்ளிக் குன்றின் ஒருபால் விளங்கும் மௌனமடத்தின் நிருவாகப் பொறுப்பு தருமையாதீனத்தின் அருளாட்சியில் செழித்து வளர்கிறது.

தருமையாதீன ஞானபீடத்தில் 26வது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 25வது குருமூர்த்திகள் காலத்தில் மௌனமடத்தின் கட்டளைவிசாரணைப் பொறுப்பேற்றுத் திருச்சிராப்பள்ளி அன்பர்களோடு நெருக்கமான தொடர்பூண்டு அருளறப்பணிகள் பலவும் இயற்றிவந்த பெருஞ்சிறப்பிற்குரியவர்கள். இவர்கள் ஞானபீடம் ஏற்றருளிய பின்னர் திருச்சிராப்பள்ளியிலும் - அதன் சுற்றுப்புறச் சிற்றூர்களிலும் வாழும் பேரன்பர்கள் பலகாலும் தருமைக்கு வந்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களைத் திருச்சிராப்பள்ளிக்கு எழுந்தருளச் செய்து, பட்டணப்பிரவேசம் செய்வித்து வரவேற்று வழிபட விருப்பங்கொண்டு அவ்வப்போது வேண்டிவந்தனர்.

ஸ்ரீ மட்டுவார்குழலம்மை உடனுய ஸ்ரீ தாயுமானவரைத் தரிசிக்கவும், அன்பர்கள் பலரது வேண்டுகோளை நிறைவிக்கவும் வேண்டித் திருவருள் குறிப்பின்வண்ணம் 19—8—1973 ஞாயிறன்று திருச்சிராப்பள்ளிக்கு எழுந்தருள ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் திருவுள்ளம் பற்றினார்கள். அன்பர்களுக்குப் பட்டணப் பிரவேசமாக எழுந்தருளுவது தற்போது வேண்டாம்

என்றும், பின்பொருமுறை வைத்துக்கொள்ளலாம் என்றும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அறிவுறுத்தினார்கள்.

## வரவேற்க ஏற்பாடு :

திருச்சிராப்பள்ளி சைவ-நல்லன்பர்கள் பலரும் ஒருங்கிணைந்து நகராட்சித் தலைவர் டாக்டர். திரு. வி. கே. ரங்கநாதன் அவர்கள் தலைமையில் வரவேற்புக்குழு ஒன்று நிறுவி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபட விரிவான ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்திருந்தனர். மௌன மடத்தின் அலுவலர்களும் தக்கமுறையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்க ஆவன செய்திருந்தனர்.

திருச்சிராப்பள்ளி நகரமெங்கணும் வரவேற்பு வளைவுகளும், தோரணங்களும் நிறைந்திருந்தன. ஆங்காங்கே தோரணப் பந்தல்கள் போடப்பெற்று பூரணகும்ப மரியாதைகளோடு திருச்சி நகர மக்கள் வரவேற்கக் காத்திருந்தனர். சைவ - நல்லன்பர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வருகையை அகமும் முகமும் மலர ஆர்வமோடு எதிர்பார்த்து ஸ்ரீ நன்றுடையான் பிள்ளையார் திருக்கோயில் வாயிலிலிருந்து மௌனமடம் யானைமண்டபம் வரை இருமருங்கும் பல்லாயிரக் கணக்கில் திரளாகக்கூடியிருந்தனர்.

## நகர் எல்லை வரவேற்பு :

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருச்சிராப்பள்ளிக்கு எழுந்தருளும் வழியில், சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்றும், திருஞானசம்பந்த சுவாமிகளால் இடர் களையும் திருப்பதிகம் அருளிச்செய்யப்பெற்றதுமாகிய திருநெடுங் களத்துக்கு எழுந்தருளத் திருவுளம் பற்றினார்கள்.

தஞ்சை - திருச்சி நெடுஞ்சாலையில் திருஎறும்பியூர்க்கு அண்மையில், திருநெடுங்களத்திற்குப் பிரியும் கிளைச்சாலை அருகில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்கள் எழுந்தருளியபோது காலை 9 மணி அளவில் வரவேற்புக் குழுவைச் சார்ந்த அன்பர்கள் மாலை அணிவித்து பூரணகும்ப மரியாதைகளோடு வரவேற்றனர். மௌனமடத்தின் சார்பிலும், வரவேற்புக் குழுவின் சார்பிலும் ஸ்ரீ தாயுமானசுவாமிகள் அருளிப்பாடாகப் பிரசாதம் பார்க்கப்பெற்றது.

வரவேற்புக் குழுவின் துணைத்தலைவரும், ஸ்ரீரங்கம் நகர சபைத் தலைவருமாகிய திரு. ஒய். வெங்கடேச தீட்சதர், வரவேற்புக் குழுவைச் சார்ந்த கவிஞர். திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், அருள்நெறித் திருக்கூட்டத்தின் - திருச்சி மாவட்டத் தலைவர் திரு. ப. மூக்கப்பிள்ளை, ஆதீன அன்பர் திரு. தாயுமான பிள்ளை, திரு. சென்னியப்ப முதலியார் முதலியோர் ஊர் எல்லையில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு மலர்மாலை சூட்டி வணங்கி ஆசிபெற்றனர்.

## நெடுங்களம் வழிபாடு :

அன்பர்கள் புடைசூழ ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருநெடுங்களத்திற்கு எழுந்தருளினார்கள். திருக்கோயில் வாயிலில், அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று காணிக்கை செலுத்தி வழிபட்டார்கள். அவர்தம் இளவல் திரு. மூத்துசாமி பிள்ளை, திருச்சி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. புலியூருடையான், கோயில் நிருவாக அலுவலர் திரு. எம். ஜெயராமன் ஆகியோர் பூரணகும்ப மரியாதைகளோடு வரவேற்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வழிபாடு செய்வித்தனர்.

விநாயகப் பெருமானுக்கு அஷ்டோத்தரமும், சுவாமி-அம்பாளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும் செய்வித்து, இறையவர் திருமேனிகளுக்குப் பட்டாடைகள் சாத்துவித்து, இடர்களையும் திருப்பதிகம் ஓதச்செய்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் முறையாக வழிபாடாற்றினர்கள். திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை முதலிய அனைவருக்கும் பிரசாதம் வழங்கி ஆசி அருளியபின் திருச்சிராப்பள்ளி வரவேற்பிற்கு அங்கிருந்து எழுந்தருளினார்கள்.

## கயிலாசபுரத்தார் எதிர்கொளல் :

திருஎறும்பியூரை அடுத்த கைலாசபுரம் அருள்நெறித் திருக்கூட்டத்தார் தோரணப் பந்தலிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்றார்கள். அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஊர்தியினின்றும் இறங்கி அவர்கள் அமைத்திருந்த தோரணப் பந்தலுக்கு எழுந்தருளினார்கள். கைலாசபுரம் அருள்நெறித் திருக்கூட்டத்தின் உப தலைவர் திரு. அ. நாராயணன், பொதுச்செய

லாளர் திரு. கொ. நடேசபிள்ளை, பொருளாளர் திரு. ஆர். சீனிவாசன் முதலியோர் மலர்மாலை சூட்டி வழிபட்டனர். கைலாச புரம் வாழ் நூற்றுக்கணக்கான ஆண்களும் - பெண்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை வணங்கிப் பிரசாதம்பெற்றனர்.

## பள்ளியில் வரவேற்பு :

அடுத்து, திருச்சிராப்பள்ளி நகருள், வரகநேரி, செவ்வந்தி லிங்கம் முத்திரியர் உயர்பள்ளி சார்பில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானம் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பெற்றது. அப்பள்ளியின் தலைமையாசிரியரும், மாணவிகளுமாக இருமருங்கும் நின்று வரவேற்றனர். பள்ளித்தாளாளரும், திருச்சிமாவட்டத்தெய்விகப் பேரவைத் தலைவருமாகிய திரு. எஸ் தம்புரான் மலர்மாலை அணிவித்தார். மாணவியர் செவ்விய ரோஜா இதழ்களால் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளை அருச் சித்து வழிபட்டனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அனை வருக்கும் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

## நகர்வலப் பேரழகு :

திருச்சிராப்பள்ளி ஸ்ரீ நன்றுடையான் திருக்கோயில் வாசலில் ஆயிரக்கணக்கான அன்பர்கள் இருமருங்கும் திரளாகக்கூடியிருந் தனர். பூர்ணகும்ப மரியாதையை ஏற்றுக்கொண்டு, அருளிப் பாடாகப் பிரசாதம் பார்த்துக்கொண்டு, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மௌனமடத்திற்கு நகர்வலமாக எழுந் தருளினார்கள். அலங்கரிக்கப்பெற்ற கோயில் யானை கம்பீரமாக முன்செல்ல இருமருங்கிலும் எடுபிடிகள் அணிவகுக்க, கொட்டு முழக்கங்கள், வாணவேடிக்கைகள் ஒசையிட ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் ஊர்தி மெதுவாக ஊர்வதாயிற்று.


திரு. ஏ. கே. சி. நடராசன் குழுவினரின் கிளாரினட் இசை யும், ஷேக்சின்னமௌலானா சாகிப் நாதசுர இன்னிசையும் இனிமை கூட்டின.

திருச்சிராப்பள்ளி நகர தெய்விகச் சங்கத்தைச் சார்ந்த இளைஞர்களும் சைவப் பேரன்பர்களும் கட்டுக்கடங்காத பெருங் கூட்டத்தினை வழிப்படுத்தினர். வழிநெடுக அன்பர்களது இல்லங்கள்தோறும் தோரணப் பந்தல்கள் அமைக்கப்பெற்று பூரணகும்பம் வைத்து திருவிளக்குகள் ஏற்றுவிக்கப்பெற்று மங்கலம் பூத்துப் பொலிந்தன.

தருமையாதீனம் ஆவணிமூல விழாவில் (6—9—73)



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருச்சிராப்பள்ளி திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமிரெட்டியார் அவர்களுக்குச் 'செந்தமிழ்க்கவிதைச்செம்மல்' என்ற பட்டம் வழங்கி ஆசியருளியது.



மையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் கொலுக்காட்சி வழங்கியருளல்.

திருச்சிராப்பள்ளி வரவேற்பு வழிபாட்டில் :
(19—8—73)



யானைகட்டிமண்டபத்திலிருந்து மக்கள் பெருவெள்ளத்துடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் மகேசன் வழிபாட்டுக்கு எழுந்தருளல்.

அருங்காட்சி :

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆயிரக்கணக்கான அன்பர்களும் தரிசித்து மகிழவேண்டுமென்ற பெருங்கருணையால் ஊர்தியினின்றும் இறங்கி அன்பர்களுக்கிடையே எழுந்தருளினார்கள். தாய்முகம் காணும் பேரவாவுடன் விரையும் ஓர் சேயைப் போல் தாயான ஈசனைக்காணும் பெருவிருப்பில் நடந்து செல்லவேண்டுமென்ற குறிப்பை வெளிப்படுத்துவதாக இக் காட்சி அமைந்திருந்தது. தேவார இன்னிசை முழக்கமும் அரகர சிவசிவ என்ற சிவநாம ஒலிகளும் வானைப் பிளந்தன. சிவப்பொலிவோடு, ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு இடையே ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிவந்த அருட் காட்சி, முற்காலத்தே திருஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர் கள் நிகழ்த்திய தலயாத்திரைகள் எவ்வண்ணம் நடைபெற் றிருக்கும் என்பதனை நினைப்பிப்பதாக அமைந்திருந்தது.

இல்லங்கள் தோறும், பெண்கள் மங்கல ஆலத்தி ஏந்தினர். அன்பர்கள் வணங்கித் திருவருள் பிரசாதம் பெற்றனர். இரண்டு பர்லாங் தொலைவினைக்கடக்க ஏறத்தாழ ஒருமணி நேரத்திற்குமேல் ஆயிற்று.

மௌனமடத்தின் வாயிலுக்கு எழுந்தருளியவுடன் தேவஸ் தானச் சார்பில் அருளிப்பாடாக, பூர்ணகும்பம் முதலிய கோயில் மரியாதைகளோடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வரவேற்கப் பெற்றார்கள். பின்னர் யானைகட்டி மண்டபத்தி லிருந்து மௌனமடத்திற்கு எழுந்தருளினார்கள்.

கொலுக் காட்சி :

மௌன மடத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த அலங்காரக் கொலுபீடத்திற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவருட் பொலிவோடு எழுந்தருளினார்கள். மௌன மடம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் மௌன. மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் கொலுவழிபாடு நிகழ்த்தினார்கள். முன்னரே கொலு மண்டபத்தில் திரண்டிருந்த அன்பர்கள் பாதகாணிக்கைகள் செலுத்தி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தை வழிபட்டு, திருவருட் பிரசாதம் பெற்றனர்.

கொலுவழிபாடு நிகழ்ந்தேறிய பின்னர் மௌனமடத்துப் பணியாளர்களுக்கும் ஸ்ரீ தாயுமானவ சுவாமி திருக்கோயில் சிவாசாரியர்களுக்கும் திருக்கோயில் பணியாளர்களுக்கும்

புத்தாடைகள் வழங்கி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசி வழங்கினார்கள்.

## தாயுமானார் வழிபாடு :

அடுத்துப் பகல் 12 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள். சிராப்பள்ளிக்குன்றின் உச்சியில் அமைந்திருக்கும் பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சென்று அருச்சித்து வழிபாடாற்றி மீண்டார்கள்.

அங்கிருந்து மீண்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சென்றடையாத திருவுடையானும் - சிராப்பள்ளிக் குன்றுடையானுமாகிய ஸ்ரீ தாயுமானார் சந்நிதிக்கு எழுந்தருளினார்கள். ஞானத்தின் திருவுருவாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்' என்ற அப்பர்பெருமான் திருவாக்கினை மெய்ப்பிப்பது போல், நெய்தீபம் ஏற்றிய இரண்டு பெரிய வெள்ளி முகவிளக்குகளைத் தாயுமானார் சந்நிதியில் என்றும் விளங்க வழங்கியருளினார்கள்.

## தாயுமானார் :

பெருமானுக்குப் பட்டாடை அணிவித்து பஞ்சமுகார்ச்சனை செய்வித்து தலத்தேவாரத் - திருமுறைப் பதிகங்கள் முழுவதும் ஓதச்செய்து முறையாக வழிபாடாற்றினார்கள். பரிவார தெய்வங்களை வழிபட்டுக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ மட்டுவார் குழலம்மை சந்நிதிக்கு எழுந்தருளினார்கள்.

அம்மை சந்நிதியிலும் என்றும் ஒளிவிளங்கும் வண்ணம் இரண்டு பெரிய வெள்ளிமுக விளக்குகளை நெய்தீபம் ஏற்றி வழங்கி அம்மைக்குப் பட்டாடை அணிவித்து, நவசக்தி அர்ச்சனை நிகழ்வித்து வழிபாடாற்றிக்கொண்டு மௌனமடத்திற்கு மீண்டும் எழுந்தருளினார்கள்.

ஸ்ரீ தாயுமானார் சந்நிதியிலும், ஸ்ரீ மட்டுவார்குழலம்மை சந்நிதியிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் என்றும் ஒளிவிடச் செய்தளித்த ரூபாய் நாலாயிரம் மதிப்புடைய நான்கு வெள்ளிமுக விளக்குகளோடு வெள்ளிக் கமலத்தாம்பாளம் ஒன்றும், ஒன்பதுமுக வெள்ளிக் கற்பூரக்கிளை யொன்றும் ஸ்ரீ தாயுமானார் வழிபாட்டிற்கென மௌனமடத்தின் கட்டளை

சார்பில் செய்விக்கப்பெற்று உபயோகத்திலிருந்துவர ஏற்பாடு செய்யப்பெற்றது. வரவேற்புக் குழுவினர் சார்பில் அன்பர்கள் பக்தர்கள் அடியவர்கள் முதலியவர்கட்கு நண்பகல் மாகேஸ்வர பூஜை சிறப்பாக நடந்தேறியது.

## வரவேற்புப் பெருவிழா :

திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் வரவேற்புக் குழுவின்சார்பில் மாலை மணி 4-15 அளவில் வரவேற்புப் பெருவிழா தொடங்கலாயிற்று, பல்வேறு வண்ண மலர்களால்' சோழநாட்டின் கலைச்சிறப்பை அறிவிப்பதுபோல் மலர்மேடை ஒன்று அமைக்கப்பெற்று வண்ண மின்விளக்கு களால் கவினுற அலங்கரிக்கப்பெற்றிருந்தது. நூற்றுக்கால் மண்டபமே புதுப்பொலிவில் துலங்கியது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் பக்தர்கள் விழா மண்டபத்தில் முன்னரே வந்து குழுமியிருந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளியபின் திரு. முத்துக்கந்தசாமி அவர்கள் இறைவணக்கம் இசைக்க விழா தொடங்கியது.

## நகர்மன்ற வரவேற்பு :

திருச்சிராப்பள்ளி நகரசபைத் தலைவரும், வரவேற்புக் குழு வின் தலைவருமாகிய டாக்டர், திரு. V. K. ரங்கநாதன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்றுப் பொன் னுடை காணிக்கை செலுத்தி மாலை அணிவித்து நகராட்சியின் சார்பில் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

நகர்மன்ற உறுப்பினர் திரு. காத்தமுத்து அவர்கள் திருச்சி நகர்மன்ற உறுப்பினர்களையும், நிர்வாக அலுவலர்களையும் ஒவ்வொருவராக அறிமுகம் செய்வித்து உரை நிகழ்த்தினர்.

அடுத்து பல்வேறு அறநிலையங்கள் - சங்கங்கள் - குழுக் களின் சார்பில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் படித்தளிக்கப்பெற்று பாதகாணிக்கை கள் செலுத்தப்பெற்று மாலைகள் அணிவிக்கப்பெற்றன.

## திருக்கூட்ட வரவேற்பு :

தாயுமானுர் திருக்கோயில் தரும கருத்தா குழுத்தலைவர் திரு. இராமசுப்பிரமணியம் அவர்கள் திருக்கோயில் சார்பில் வரவேற்பிதழ் படித்தளித்து மாலை அணிவித்தார்.

திருச்சிராப்பள்ளி பொதுஜனங்கள் சார்பில், அதிருத்ரக் கமிட்டி உறுப்பினர் திரு. கைலாசம் ஐயர் அவர்கள் வரவேற்பிதழ் படித்தளித்து மாலை அணிவித்தார். திருச்சி பாபுலர் ஆட்டோமொபைல்ஸ் உரிமையாளர் திரு. இராஜகோபால ஐயர் அவர்கள், திருச்சி மலைக்கோட்டை வடிவில் செய்தளித்த வெள்ளிமலையைப் பொதுமக்கள் சார்பில் அன்னரே வழங்கி மாலை அணிவித்து இவ்வன்புக் காணிக்கையை ஏற்றுக்கொண்டு அருளாசி வழங்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

அடுத்து திருச்சி தாயுமானர் மகாருத்ர அபிஷேக விழாக் கமிட்டியின் சார்பில், தாயுமானர் திருக்கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர் திரு முத்துக்குமரன் அவர்கள் வரவேற்பிதழ் படித்தளித்தார். அக்கமிட்டியில் அங்கம் வகிக்கும் டாக்டர், திரு. வி கே. ரங்கநாதன் மாலை அணிவித்தார். அதன் உறுப்பினர்களுள் ஒருவராகிய திரு. த ஞானசம்பந்த சிவாசாரியார் அவர்கள், அழகிய ஜரிகை வேலைப்பாடுகள் செய்யப்பெற்ற செந்நிற காஷ்மீர் சால்வை ஒன்றை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குப் போர்த்தி மரியாதை செலுத்தினர்.

திருச்சி மாவட்ட அர்ச்சகர்கள் - பூசாரிகள் சங்கத்தின் சார்பில் அல்லூர், திரு. விசுவநாத சிவாசாரியார் வரவேற்பிதழ் படித்தளிக்க, அச்சங்கத்தின் பொருளாளர் திரு. இராஜாசுப்பிரமணிய குருக்கள் மலர்மாலை அணிவித்தார்.

அடுத்துப் பூவாளூர் சைவ - சித்தாந்த சங்கத்தின் சார்பில் வரவேற்பிதழ் படித்தளிக்கப்பெற்று மாலை சூட்டப்பெற்றது.

திருத்தவத்துறை எனப்படும் லால்குடி அறநெறிக் கழகத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. ஜி. கனகசபைப் பிள்ளை அவர்கள் வரவேற்பிதழ் வாசித்தளித்து மலர்மாலை சூட்டினர்.

திருச்சி நகர அருள் நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் செயலாளர் திரு. சொ. கிருஷ்ணன் அவர்கள் வரவேற்பிதழ் படித்தளிக்க, மாவட்டத் தலைவர் திரு. மூக்கப்பிள்ளை அவர்கள் மாலை அணிவித்தார்.

கைலாசபுரம் அருள்நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் துணைத் தலைவர் திரு. நடேச பிள்ளை அவர்கள் வரவேற்பிதழ் வாசித்தளிக்க, பொருளாளர் திரு. சீநிவாசன் அவர்கள் மாலை அணிவித்தார்.

திருச்சிராப்பள்ளி மங்கையர்க்கரசியார் திருக்கூட்டத்தின் சார்பில் வரவேற்பிதழ் படித்தளித்து அதன் உறுப்பினர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வணங்கி ஆசிபெற்றனர்.

அடுத்து, திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையின் சார்பில் திரு. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களும், திருவானைக்கா பன்னிரு திருமுறை வழிபாட்டுக்கழகச் சார்பில் திரு. கலைவாணன் அவர்களும், திருச்சிராப்பள்ளி திருக்குறட் கழகச்சார்பில் திரு. சுப்பையா ரெட்டியார் அவர்களும், உறையூர் வாகீச பக்தஜன சபைசார்பில், பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி மெய்யுணர்வுத் துறை முதுகலைப் பேராசிரியர் திரு வை. இரத்தினசபாபதி அவர்களும் வரவேற்பிதழ்கள் படித்தளித்து மலர்மாலைகள் சூட்டி வணங்கினர்.

திருச்சி மௌனகுரு வழிபாட்டுக் கழகத்தின் சார்பில் திரு. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் வரவேற்பிதழ் படித்தளிக்க, அதன் தலைவர் மலர்மாலை சூட்டினர்.

அடுத்து, திருச்சிநகரத் தெய்விகப் பேரவையின் சார்பிலும், திருச்சியிலிருந்து வெளிவரும் 'தேவாலயம்' என்ற திங்களிதழ் நிருவாகிகள் சார்பிலும் வரவேற்பிதழ் படித்தளிக்கப்பெற்று மலர்மாலைகள்சூட்டப்பெற்றன

திருச்சிராப்பள்ளித் தமிழாசிரியர் புலவர், திரு. வைத்திய நாதன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்பிதழ் படித்தளித்து மாலை சூட்டியதோடு, ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானத்தில் காலையில் திரு நெடுங்களம் எழுந் தருளியதை முன்னிட்டு, அத் தலத்திற்குரிய திருஞானசம்பந்தர் அருளிச்செய்த இடர்களையும் திருப்பதிகத்தை அச்சிட்டு அன்பர்க ளிடையே வழங்கினர்.

திருச்சி ஸ்ரீ நன்றுடையான் சத்சங்கம் சார்பில் அதன் தலைவர் வரவேற்பிதழ் படித்தளித்தார்.

அரியலூர் ஸ்ரீ மாணிக்கவாசக மன்றத்தார் வரவேற்பிதழ் படித்தளித்து சந்தானாசாரியர் திருவுருவங்கள் எல்லாத் திருக் கோயில்களிலும் இடம்பெற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஏற்பாடுசெய்தல் வேண்டுமென வேண்டினர்.

## பல்லோர் வழிபாடு :

மற்றும், தருமகர்த்தாக்குழுவின் தலைவர் திரு. ஏ. பி. டி. தேவ ராஜன் மாலை அணிவித்தார். சந்திரசேகர வர்த்தக ஜனசபை, புத்தூர் அம்மையப்பன் திருப்பணிக்குழு, வரகநேரி கூட்டுவழி பாட்டுச்சங்கம், வரகானூர், ஆமூர், துறையூர், திண்ணனூர், அரங்கநாதன்பேட்டை, உள்ளரங்கன்பட்டி முதலிய சிற்றூர் தெய்விகப் பேரவைகள், தென்னூர் அருள்நெறித் திருக் கூட்டம், மணப்பாறை தெய்விகப்பேரவை, திருச்சி திருப்புகழ் தத்துவார்த்த சபை, திருச்சி மாவட்ட சன்மார்க்க சங்கம் முதலிய சமயச் சார்புடைய மன்றங்களின் சார்பில் அதன் பொறுப்பினர் கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவித்து வணங்கினர்.

மலைக்கோயில் முழுவதற்கும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட செலவில் மின் ஒளி விளக்குகள் அமைத்தவரும் பிர்லாடிரஸ்ட் சார்பிலும். திருச்சி நகரத்தார் சார்பிலும் மலர்மாலைகள் அணி விக்கப்பெற்றன.

வரவேற்பு இதழ்கள் படித்தளிக்கப்பெற்றதன் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருள் நலத்தை வியந்து போற்றும் வகையில் வரவேற்புக் குழுவைச் சார்ந்த அன்பர்கள் இருவர் உரையாற்றினர்.

## அன்பர்கள் பணிவுரை :

வரவேற்புக்குழுவின் உபதலைவர், திரு, தெய். வெங்கடேச தீட்சதர் பேசுகையில், "கலியுகத்தில் தர்மம் குறைந்து அதர்மம் பெருகியுள்ளது. கலியுகத்தில் தர்மம் குறைந்து - சாதுக்களுக் குத் தீங்கு நேர்கையில் நான் அவதரிப்பேன் என்று கண்ண பிரான் கீதையில் அருளுகிறார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் போன்ற அருளாளர்களாலேயே உலகம் நிலைத்திருக்கிறது. அவர்கள் சிறப்பிற்கும், ஆட்சித் திறத்திற்கும், அவர்கள் பரிபாலனத்திலுள்ள திருக்கோயில்களே சான்றாகும். வைத்தீஸ் வரன்கோயிலுக்கு ஒருமுறை சென்றாலே இதனை உணர்ந்து கொள்ள முடியும். கொந்தளிப்பான அரசியல் போய்க்கொண்டி ருக்கும் இந்நாளில் இத்தகு அருள் நலம் கொண்ட மகாசந்நிதானம் கிடைத்திருப்பது நமது பாக்கியம். அருமையான வேதாகம பாட சாலை தேவாரப்பாடசாலைகளை நிருவகித்துவருவது ஆஸ்திகர்கள் செய்தபுண்ணியமாகும்" என்றுகூறி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

அவர்கள் ஸ்ரீரங்கத்திற்கு ஒருமுறை எழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டார்.

அடுத்து வரவேற்புக் குழுவில் முக்கிய பங்கு வகித்த, கவிஞர், திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் பாராட்டுரை நிகழ்த்துகையில், "தருமையாதீனத்திற்கும் - திருச்சிராப்பள்ளிக்கும் இடையே உள்ள உறவு உயிர்க்கும், உடலுக்கும் உள்ள தொடர்பு போன்றது. அழியாத அமரத் தன்மை பெற்றது. தருமையாதீனத்தின் 15 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக சுவாமிகள் திருச்சிக்கு அக்காலத்தே எழுந்தருள எண்ணி திருஎறும்பியூர்வரை வந்து சேர்ந்தார்கள். திருச்சிராப்பள்ளி யில் இந்து - முஸ்லிம் கலகம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத் தைத் திருச்சிக்கு எழுந்தருள இது தருணமன்று என்று வேண்டிக்கொண்டனர். எதற்கும் அஞ்சாது அன்று அவர்கள் திருச்சிக்கு வந்து தாயுமானப்பெருமானை வழிபட்டார்கள். அவர்கள் எழுந்தருளியவுடனேயே கலகம் அடங்கி இங்கே அமைதி நிலவியது. சுபிட்சம் ஏற்பட்டது. இத்தகு அருளாளர் கள் தருமையின் ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்துள்ளனர். இவ்வாதீனத்தின் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தாயுமானர் கோயில் கும்பாபிடேகத்திற்குப் பெருந்தொகை வழங்கிச் சிறப்பித்தமை நாடறிந்த செய்தியாகும். 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் திருச்சி நகரமக்களுக்குச் சொந்த மானவர்கள். மௌன மடத்திலிருந்து தருமை ஞானபீடத் திற்குச் சென்றவர்கள் என்று கூறி, வரவேற்புக்குழுவின் சார்பில் பாதகாணிக்கை செலுத்தி வழிபாடாற்றி ஆசிபெற்றார்.

வரவேற்பு வைபவங்களுக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானம் அவர்கள் அன்பர்களிடையே அருள்நலம் கொழிக்கும் சாத்திர - தோத்திர நுண்மைகளோடு, உலகியல் நோக்குப்பட நீண்ட அருளுரை வழங்கிச் சிறப்பித்ததோடு அன்பர்களுக்கு, அவர்களது வரவேற்பிற்காக நல்வாழ்த்துக் கூறி ஆசிவழங்கி னார்கள். (ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசியுரை தனியே வெளியிடப்பட்டுள்ளது.

## நூல் வெளியீடு :

வரவேற்புக் குழுவினர் தருமையாதீனத்திற்கும் - திருச்சிராப் பள்ளிக்கும் இருந்துவரும் தொடர்புகளை விளக்குவதும், தருமையாதீனக் குருமகாசந்நிதானங்களின் அருள்வரலாறுகளை

அறிவுறுத்துவதுமான ஒரு நூலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளும் தருணத்தில் அச்சிட்டு வழங்கினால் பெரும்பயன் விளையுமென விண்ணப்பித்துக் கொண்டனர். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க 'தருமையாதீனமும் தாயுமானவர் திருக்கோயிலும்' என்னும் நூல் ஒன்று ஞானசம்பந்தம் பதிப்பகத்தின்சார்பில் அச்சிட்டு அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்களின் திருக்கரத்தால் வழங்கப்பெற்றது.

அடுத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பக்தர்கள் பலருக்கும் அருள்-அறப்பணி மன்றங்களைச் செம்மையாக நடத்தி வரும் அன்பர்களுக்குப் பட்டாடைகள் போர்த்தி ஆசீர்வதித்துப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். பின்னர் கிளாரினெட் இசைத்த திரு. ஏ. கே. சி. நடராஜன், நாதசுரம் வாசித்த திரு. ஷேக் சின்னமௌலானா சாகிப் இருவருக்கும் பொன்னாடைகள் வழங்கியருளினார்கள். திரு. கைலாசநாதஐய்யர் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.

வாழ்த்திசைத்தபின்னர், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் மௌன மடத்திற்கு எழுந்தருளினார்கள்.

ஷேக் சின்னமௌலானா சாகிப்பின் நாதசுர இன்னிசை இரவு நடைபெற்றது.

## உய்யக்கொண்டான் திருமலை:

வரவேற்பு வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தருமையாதீன அருளாட்சிக்கு உட்பட்ட 'கற்குடி மாமலை' என்று தேவாரத்துள் போற்றப்பெறுவதும் மூவர் தேவாரமும்பெற்ற பெருஞ் சிறப்புடையதுமாகிய உய்யக் கொண்டான் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். திருக்கோயில் வாயிலில் ஊர்மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்து பூரணகும்ப மரியாதைகளோடு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபட்டனர். இத்தலத்தே திருக்கோயில் கொண்டு அருள் வழங்கும் உஜ்ஜீவநாதசுவாமிக்கும் அருட் கோலங்கொண்டு விளங்கும் அஞ்சலாட்சி பாலாம்பிகை என்னும் இறைவியர் திருமேனிகளுக்கும் பட்டாடைகள் அணிவித்து அர்ச்சித்துத் தலப்பதிகங்கள் முழுவதையும் ஓதுவித்து வழிபாடாற்றினார்கள். பாலாம்பிகை அம்மைக்குச் சந்தனக் காப்பு அலங்காரம் செய்விக்கப்பெற்றிருந்தது. திருக்கோயில் பணியாளர்களுக்குப் புத்தாடைகளும் பக்தகோடிகளுக்குப் பிரசாதமும் வழங்கியருளியபின் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருச்சி மௌனமடத்திற்கு மீண்டு இரவே தருமைக்கு எழுந்தருளினார்கள்.

# இதயநோய், பக்கவாதம் தீர

## குங்குலியம்

சில வகை இதய அடைப்பு நோய்கள் மற்றும் பக்கவாத நோய்களால் தாக்கப்பட்டு ஓரளவு குணமடைந்துவரும் நோயாளிகள் மீண்டும் அந் நோய்களுக்கு இரையாகி விடாமல் தடுக்கும் நாட்டு மருந்து ஒன்றைக் காசி ஹிந்து சர்வகலாசாலை வைத்தியக் கழகம் கண்டுபிடித்துள்ளது.

உடலினுள் இரத்தம் ஓடுகையிலேயே கட்டிதட்டிப் போகிறதன்மை அடைவது ஆபத்தானது. மூளைப்பகுதிகளில் இவ்வாறு இரத்தம் கெட்டியாகுமானல், நரம்புகள் பாதிக்கப்பட்டு பக்கவாதம் நேரிடுகிறது. இதயத்தின் தசைகளில் பரவியுள்ள இரத்தக் குழாய்களில் இரத்தம் கெட்டியாகுமானல் இதய வலி நேரிட்டு இதயம் நின்று போகக்கூடிய அபாயம் நேரிடும்.

இவ்வாறு இரத்தம், குழாய்களினுட்புறம் கெட்டிப்படும் நோய்த்தன்மையைக் குங்குலியம் நீக்கிவிடுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதயத்திலிருந்து வெளிப்படும், பெரிய இரத்தக் குழாய்களின் உள் சுவர்களில் கொழுப்புப் படிவது ஒரு நோய். இதனல் குழாய்களின் உள் வாய் குறுகிப்போய், குழாயின் சுருங்கி விரியும்தன்மை குறைந்து இரத்த ஓட்டத்திற்குத் தடை - இரத்த அழுத்தம் - அதிகரிக்கிறது.

கொழுப்பு இரத்தக் குழாய்களினுள் படிவதையும் குங்குலியம் தடுக்கிறது என்று வைத்தியக் கழகம் கண்டுபிடித்துள்ளது.

தற்போது இந்த நோய்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளைவிடக் குங்குலியம் சிறந்ததாக இருக்கிறது என்றும், ஏனெனில், இரத்தம் கெட்டிப்படுதல், கொழுப்புப் படுதல் இரண்டையும் நீக்கும் குணம் ஒருங்கே உள்ளதாக இருக்கிறது என்றும் கூறப்பட்டது.

நன்றி. — தினமணி 21—8—1973.

# சுவர்க்க நரக இயல் — — பாவப் பயன்*

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

**பாவம் செய்தவர்கள் யமனைக்கண்டு அஞ்சுவார்கள் :-**

வேதாகம வழியில் நடவாதவர்களும் அதனை இகழ்ந்தவர்களும் கொடிய பாவங்களைச் செய்தவர்களும் வஞ்சகர்களும் ஆகிய பாவிகள் யமதர்மனைக் கண்டபொழுது பாம்பைக் கண்டதுபோல நடுநடுங்குவார்கள்.

**யமன் எப்படி இருப்பான் :-**

மைபோன்ற மேனி, பதினெட்டுக்கை, வெண்மையான இளம்பிறை போன்ற பற்கள், கடுகடுத்த முகம், தீயை உமிழ்கின்ற கண்கள், நெற்றிமீது ஏறிய வளைந்த புருவங்கள், வலிமையான உடல், அதில் மேல்நோக்கிய ரோமங்கள், தடித்து கருத்து நிறைந்த மீசை, துடிக்கின்ற உதடுகள், மகா மேரு மலைபோன்ற உயரம், தண்டம், நெருப்புபோல கொளுத்துகின்ற ஆயுதம் இவற்றை உடையவனாக, காலமேகம் போன்று கருகரு என்று இருக்கின்ற எருமைக்கடாவின்மேல் சிவந்த பரிவட்டங்களை உடுத்திக்கொண்டு சிவந்த மாலையையும் தாங்கி இடிபோன்ற குரலோடு உலகம் எல்லாவற்றையும் விழுங்கும் விருப்பத்தோடு வருவான். அவனுக்கு ஒரு பக்கத்தில் மிருத்தியுவும் ஒரு பக்கத்தில் காலனும், அந்தகனும், மாரியும் இருக்க நடுவிலே யமன் இருப்பான்.

கண்டோர்கள் அஞ்சும்படி சுளித்த உருவத்தோடு கூடிய நெற்றி, யாரையும் அச்சுறுத்துகின்ற தன்மை இவற்றுடன் கையிலே சூலமும், பாசக்கயிறும், தகதக என மின்னுகின்ற தோட்டியும், தண்டாயுதமும், வாளும், சக்கரமும், அம்பறுத்தூணியும், வில்லும், தாங்கி இருப்பான். இவ்வண்ணம் பல ஆயுதங்களைத் தாங்கிய ஆயிரம்பேர் அவனைச் சூழ இருப்பர். அவர்கள் அத்தனை பேரும் யம தூதர்கள்.

யமன் ஆட்சி :-

யமதூதர்கள் தம் அரசன் முன்னே வந்து வணங்கி எங்களைப் பணிகொள்க என வேண்டுகின்றார்கள்.

யமன் : தூதர்களே நீங்கள்போய் வேதாகம நிந்தை செய்து கடவுட்கொள்கை இல்லாமல் கண்டவண்ணம் பாவம் செய்தவர்களைக்கொண்டு வாருங்கள் எனப் பணிக்க, அவர்களும் அழைத்துக்கொண்டு வந்து நிறுத்துகின்றார்கள். யமதர்மன் அவர்களைக் கடுகடுத்துப் பார்க்கிறான். அவர்கள் நடுநடுங்கி யமனை வைத்தகண் வாங்காது பார்க்கின்றனர். அவனை மட்டுமா கண்டு அஞ்சுகிறார்கள். அவனது கணக்கனாகிய சித்தர குப்தனைக் கண்டும் அஞ்சுகின்றார்கள்.

சித்திர குப்தன் தெரிவித்தல் :-

'ஏ, பாவிகளே! வாருங்கள்; நீங்கள் யானையை ஒத்த வலிமையோடு எளிய மக்களை வாட்டி வதைத்துப் பொருள்களை அபகரித்துக் கொண்டீர்கள்: அழவைத்தீர்கள். செருக்கினாலே பிறர்மனையை விரும்பினீர்கள். நீங்கள் செய்த பாவம் உங்களை விட்டு எங்கே தொலையும்! நீங்கள் செய்த புண்ணியங்களால் பாவம் நீங்கிப் போகாது. பாவ புண்ணிய வரவு செலவு சரிக்கட்டி விடாது. நரகத் துன்பத்தை அனுபவிக்கத்தான் வேண்டும்; போங்கள் நரகத்திற்கு. நரகத்தில் துன்புற்றவர்களே பாவநீக்கம் பெற்றவர்கள். நரகத்தில் துன்பம் அனுபவிக்க அஞ்சுவீரானால் பாவம் கழிவது எப்படி?' என்று சித்ர குப்தன் சொல்கிறான்.

யமதர்மன் சினந்த முகத்தோடு நெருப்பு எழ விழித்து, 'அன்று அறநூல் வழி நடவாத நீங்கள் இன்று நரகத்துன்பத்தை அனுபவிக்கப் பயப்படுவது ஏன். ஏ அரசர்களே! வாருங்கள், வெற்றிவீரர்களே! வாருங்கள். பணத்திற்கு ஆசைப்பட்டுப் படு பாதகமான செயல்களைச் செய்தீர்கள். உங்களுக்கு இப்போது உதவுவது எது? சொல்லுங்கள். அந்தப்புரத்திலே காதலோடு வைத்து இருந்த காதலிகள் எங்கே. சுற்றத்தார் எங்கே? யானை எங்கே? குதிரை எங்கே? தேர் எங்கே? பல்லக்கு எங்கே? உங்களோடு இப்பொழுது ஒன்றும் வரவில்லையே. உங்களுக்குப் பலகோடி படைகள் இருந்தனவே. அவைகள் எங்கே? இப்போது எல்லாவற்றையும் விட்டுத் தனித்து நிற்கிறீர்கள். இதோ நரகத்தில் தள்ளப் போகிறேன்' என்று சொல்ல அனைவரும் அஞ்சுகிறார்கள்.

இவர்கள் நிலையைக்கண்ட யமன் மீண்டும் சண்டன் மகா சண்டன் என்ற தூதர்களைநோக்கி, இவனைக் காலால்எற்றுங்கள்

என்றான். உடனே சண்டன், மகாசண்டன் என்ற இருவரும் அந்தப் பாவிகளான கொடுங்கோல் அரசர்களாகிய பாவிகளின் இரண்டு கால்களையும் பிடித்துத் தலைகீழாகத் தூக்கி தரையிலே அடித்தார்கள். ஆகாயத்தில் எற்றினார்கள்; எரிகின்ற நெருப்பில் இட்டார்கள். கல்லில் மோதினார்கள். அவர்களும் உடம்பு சிதற, குருதி ஒழுக, கண்பிதுங்க, செவி கிழிய வருந்தினார்கள். பின்பு பாதாள லோகத்திற்குக் கீழே உள்ள எரிவாய் நரகத்தினுள்ளே இட்டார்கள். இவ்வண்ணம் பாவிகளாகிய அரசர்கள் துன்பத்தை அனுபவித்தார்கள். எனவே குடிமக்கள் அனுபவித்த துன்பத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

## நரகங்களின் தொகையும் வகையும் :-

நரகங்கள் தொகையினால் இருபத்தெட்டு; வகையினால் நூற்றுநாற்பது. விரியாக இருபத்தெட்டு கோடி. இவற்றுள் தொகை வகையாகிய நரகங்களின் பெயரை மட்டும் சொல்லுகின்றோம். நரகங்களின் பெயரும் வகையும் தொகையும் பிரளயம் தோறும் வேறுபடும். இறைவன் அருளிச்செய்த சிவாகமங்கள் வேறு வேறாகக் கூறுகின்றன. ஆனாலும் அவை ஒன்றற்கொன்று மாறுபட்டன அல்ல. கோரம், மகாகோரம், அதிகோரம், கோரதரம், கோரரூபம், தரளதரம் வயானகம், காளராத்திரி, பயோற்கடம், சண்டம். மகாசண்டம், சண்டகோலாகலம், சண்டதரம், சரோருகம், சலசவதி, பீமம், பீமபீடனம், கரளம், விக்ரளம், இவைகள் ஒன்றின்கீழ் ஒன்றாக உள்ளன. இவற்றின் கீழே முக்கோணம், சூலம், ஐந்துகோணம் அறுகோணம், தீர்க்கரம், பரிவர்த்துளம் இவை உள்ளன. அவற்றிற்கு அப்பால் ஏழுநிலமும், அதற்கு அப்பால் எட்டு நிலமும், அதற்கு அப்பால் பேரொளியும், அதற்கு அப்பால் இருள்மயமான மாயையும் உள்ளன என அறிவாயாக. இறைவனை நிந்தித்தவர்கள் எய்தும் நரகங்கள் இவை. இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோடியாக இருபத்தெட்டு கோடியாகின்றன. அங்ஙனமே ஒவ்வொன்றுக்கு அவ்வைந்தாகத் தலைமையான நரகங்கள் உள்ளன. அவை இரவ்ரவம், மகாரவ்ரவம், அதிசிதம். அதிவெப்பம் இவை கோரத்திற்கு நாயகமாகிய நரகங்கள். இப்படியாக ஏனைய இருபத்தேழு நரகங்கட்கும் நாயக நரகங்கள் உண்டு. இங்ஙனம் ஏனைய நரகங்களும் பலவாக விரியும். மேலும் மிகமிகக் கொடுமையான நரகங்கள் பலவற்றையும் கூட்டி நூற்றுநாற்பதாக எண்ணுவதும் உண்டு.

அவற்றுள் இராசாதிராச நரகம் என்பது இருளாய்ப் புழுதிமயமாய்த் தாங்க முடியாத துன்பத்தைத் தருவதாய் கொடு

மைக்கு எல்லாம் உறைவிடமாய் இருக்கும் இரவ்ரவ நரகமே இராஜநரகம். தீப்பிழம்பாக விளங்குவது கும்பீபாகம். அதை விடக் கொடுமையில் சிறந்தது இரவ்ரவம். இதனையே ராசராச நரகம் என வழங்குவார்கள். அதைவிடக் கொடுமையில் சிறந்த நரகம், புழுத்து கிருமிக் கிடங்கள் நெளிய பாம்பும் தேளும் துன்புறுத்தத் துன்ப மயமாய் இருப்பது ஆவீசி என்னும் நரகம். அது எல்லாவற்றிலும் மிக்க கொடுமை உடையது ஆதலின் இராசாதிராச நரகம் என்று சொல்லுவர்.

**கரையேற்றும் முறைமை :–**

செம்புகலந்த அழுக்கேறிய தங்கத்தைத் தட்டார்கள் புடம் போடுவது போலப் பாவிகளை யமதூதர்கள் அவீசி முதலிய நரகங்களில் அழுத்தி பாவபலன் முடிவிலே கரையேற்றுவர்.

**பாவிகள் வருந்தும் வகை :–**

சிவபெருமானின் அருளிச் செயலாகின்ற வேதாகமங்களில் விரித்தபடி ஒழுகாமல் வெறுத்து, தவமும் தானமும் செய்யாமல் இருப்பவர்களை யமதூதர்கள் கனன்று ஆயுதங்களால் குத்திக் கோபிப்பார்கள். இரும்புச் சங்கிலியினல் கையையும் காலையும் கட்டி, அந்தச் சங்கிலியையும் அவர்களையே தூக்கச்செய்து, ஓடவும் நடக்கவும் முடியாமல் எழுந்து விழுந்து புரண்டு சுருண்டு துக்கப்படுகின்ற பாவிகளை இரும்புச் சங்கிலியால் கட்டி நூறு இரும்பு உருண்டைகளைத் தொங்க விட்டுத் துரத்து வார்கள். அப்போது அப்பாவிகள் நாங்கள் என்ன பாவம் செய்தோம். அதற்குப் பரிகாரம் என்ன, என்று எண்ணி அழி வார்கள். தங்களைக் காப்பாற்ற வருவார் யாரும் இல்லாமை யாலே வருந்துவார்கள். அப்படி இருக்கும்போது யமதூதர்கள் நெருப்பைச் சொரிகின்ற சவுக்கால் இரத்தம் தெறிக்க அடிப் பார்கள். ஊன் சிதைந்து தொங்க அடிப்பார்கள். பின்பு இருப்பு உலக்கையைக் கரத்தில் கொண்டு மொத்துவார்கள். இவ்வாறு புண்பட்ட உடலிலே உப்பு, மிளகாய், புளி, காரநீர் இவற்றை அப்புவார்கள். உருக்கிய செம்பு இரும்பு இவற்றை ஊற்றுவார்கள். அங்கத்தை அணு அணுவாக அறுத்து எண்ணெக் குடத்தில் இட்டு வேகவைப்பர். அதர்மத்தைச்செய்த பேர்களை யமதூதர்கள் மலக்கிணற்றில் தள்ளுவார்கள். சீயும் இரத்தமும் அழுகிக் கிடக்கின்ற இடத்திலும் புழுக்குழியிலும் தள்ளுவார்கள். பொய் சொன்னவர்களைப் பழுக்கக் காய்ச்சிய இருப்பாணியைக்கொண்டு அடிப்பார்கள். நாக்கை அறுப் பார்கள். இப்படி அவர் செய்த பாவத்தின் வன்மை ஒழியுமாறு செய்வார்கள். ( செய்யுள் 82 முதல் 137 முடிய ) (வளரும்)

# அப்பர் வகுத்த இலக்கிய மரபுகள்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

1, 0. : உள்ளத்து உணர்ச்சியியே இலக்கியம். அவ்வுணர்ச்சி எவ்வகையிலேனும் உருவங்கொள்ளும். உரை நடையாகவோ, கவிதையாகவோ, மற்று எவ்வகையாலோ இலக்கியம் எழலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை, உரை நடை, கவிதை இரண்டும் இலக்கியப் பழமை உடைய மரபுகளேனும், 'கவிதையே' முதலிடம் பெற்றுள்ளது: இது தமிழகத்தை ஒட்டிய ஒரு பொது நிலையாக உள்ளது. சங்ககாலத்தே தோன்றியவை அனைத்துமே கவிதையாகவே இருந்தன. எதையும் வெளியிட விழைந்தவர் பாட்டாகவே வெளியிட்டனர்; ஆயினும் அதற்குமுன் உரைவகை நடை (Style of Prose) தமிழகத்தே இல்லாமல் இல்லை; தொல்காப்பியர் கூற்றுலும் இது தெளிவாகும்: 'யாப்பு என்பது' இன்னதெனக் கூறலுற்ற தொல்காப்பியர், எழுத்து அசைசீர் முதலாகத் தொடர்ந்து முடிந்த அடியினுல் குறித்த பொருளை முடிய விளங்க வைத்தலே யாப்பு என்றனர்:

> " எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
> குறித்த பொருளை முடிய நாட்டல்
> யாப்பென மொழிப யாப்பறி புலவர் " 1

இதனுல் யாப்பு அறிந்த அறிவுடையார் அவர்க்குமுன் " யாப்பு " என்பதற்கு வகுத்திருந்த வரையறை அறியப்படும். அதன் ஏழு பகுதிகளை ஆசிரியர் பின்வருமாறு மொழிந்துள்ளனர்:

> " பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே
> அங்கதம், முதுசொல்லோடு அவ்வேழ்நிலத்தும்
> வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
> நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
> யாப்பின் வழியது என்மனூர் புலவர். 2

ஆகவே, (1) பாட்டு யாப்பு (2) உரையாப்பு (3) நூல்யாப்பு (4) மொழி யாப்பு (5) பிசி யாப்பு (6) அங்கத யாப்பு (7) பழமொழி

---

1. தொல்காப்பியம் - செய்யுளியல் - 77 (கழகப் பதிப்பு 1943) (மூலம்)
2. Ibid - 78.

யாப்பு என்பன ஏழும் தமிழர் வழங்கிய யாப்புக்கள் என்பது விளங்கும்.

சேரசோழ பாண்டியரை "வண்புகழ்மூவர்" என்றுகுறித்து அவரால் ஆளப்பெறும் தமிழகத்தை "தண்பொழில் வரைப்பு" என்றனர் தொல்காப்பியர். இலக்கிய மரபுகள் என்று இங்குக் குறிக்கப்பெற்ற யாப்பு வகைகளைச் சொல்லலாம்.

1.1: பல்லவர் கால இலக்கியப் படைப்பாக அப்பர் தேவாரம் கொள்ளத் தகுந்தது என்பது அறிஞர் அறிந்தமுடிபு ஆகும். அப்பர் அடிகள் இந்த யாப்புக்களுள் மேற்கொண்டது 'பாட்டு யாப்பு' 'பழமொழியாப்பு' என்ற இரண்டும் எனலாம். 'பழமொழியாப்பை' யும் பாட்டுயாப்புள் அடக்கிவிட்டால், அவரால் மேற்கொள்ளப்பட்டது 'பாட்டு யாப்பு' ஒன்றுமே என்று கூறலாம். இந்தப் 'பாட்டு யாப்புள்' இலக்கிய மரபுகளாக அப்பர் கண்டன சில; அவற்றுள் அவர் வகுத்தனவும் சில.

ஒரு மொழியில் இலக்கியம் படைப்போன் அம்மொழி மரபுகளில் தான் நின்று படைப்பனவும் உண்டு; தானே சில புதிய மரபுகளை வகுத்துப் படைப்பனவும் உண்டு. பழைய மரபில் நின்று படைத்தல்மட்டும் ஓர் ஆசிரியன் இயல்பாகவோ, அவனுக்குப் புகழ் கூட்டுதலாகவோ அமைந்திடாது. புதிய மரபில் நின்றுவகுப்பனவே அவனது தனித்தன்மையைக்காட்டுவதுடன், மொழி வரலாற்றிலும் சில நிலைகளாக நின்று ஒளி கூட்டுவனவாக இருக்கும்.

அப்பர் ஒலிநயம் சான்ற கவிதைகளை இனிய தமிழ்ப் பண்களில் அழகுறப்பாடினர். அவருடைய பாடல்கள் பண்கலந்த உணர்வுகளைப் பண் கலந்த நடையில் வெளிப்படுத்துவனவாக அமைந்தன. அவர் மேற்கொண்ட வடிவங்கள், அவரது உயர்ந்த கவிதைகளை அழகுற உயர்த்துவனவாக அமைந்தன.3

21: "தரவின்றாகித் தாழிசைபெற்றும்" என்ற தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா உரையில் நச்சினர்க்கினியர் திருவாய்மொழிப்பாக்களைக் கூறி இவை தாழிசைகள் என்றும், இவை நான்கடியின் மிகாமல் வந்தவை என்றும், 'ஒவ்வொரு பதிகப்

---

3. Poetry is the rhythmic expression in rhythmic language of rhythmic poetic emotions. Meter (metrical rhythm) enhances and supports the organic rhythm of language in which poetic ideas and emotions are expressed"
— CREATIVE POETRY - Roland Lewis - (1931) - P. 315.

பாக்களும் ஒருபொருள்மேல் அடுக்கிவந்தன' என்றும் எழுதினர்; எழுத்தெண்ணி வகுக்கும் கட்டளைக் கலித்துறையைத் தரவுக் கொச்சகம் என்றனர். தொல்காப்பிய இலக்கணப்படி இவை தாழிசை என்றும், கொச்சக ஒருபோகு என்றும் கொள்ளத் தக்கன என்றும் கொள்ளப்படும். நச்சினார்க்கினியர், "பதிகப் பாட்டிற்கு ஈண்டுக் கூறிய வேறுபாடுகள் திருவாய்மொழி, திருப்பாட்டு, திருவாசகம் என்கின்ற கொச்சக ஒருபோகுகளிற் காண்க; அவை உலக வழக்கின்மையிற் காட்டாமாயினும்" என்றெழுதுவது இங்கே நினைவு கொளற்குரியதாகும். 4

அப்பரடிகள் இவ்வாறு பாடியுள்ள கலிவிருத்தங்களைக் 'கொச்சக ஒருபோகு' என்ற பழைய இலக்கிய வடிவத்தில் அமைத்துக் கொள்ளலாம்; அப்பரடிகள் பாடியுள்ள திருவிருத்தங்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறை என்ற வகையில் அடங்கும். பல்லவர் காலத்தே இந்தப் புதிய மரபினை வகுத்த அப்பரடிகள் இதனை மிக அழகுறக் கையாண்டிருக்கின்றார். எழுத்து எண்ணி வகுக்கும் இக்கட்டளைக் கலித்துறையைப் பற்றிய இலக்கணம் தொல்காப்பியத்தே இல்லை. ஆனால், எழுத்தெண்ணி வகுக்கும் அடிவரையறை தொல்காப்பியரால் கூறப்பட்டதே யாகும். திருவிருத்தம் என்ற பெயரில் அப்பர் அடிகள் பாடும் பாடல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறைகளே. 5

(தொடரும்)

4. தொல்காப்பியம் - செய்யுளியல் - 148,
5. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் - சைவசித்தாந்த மகாசமாசம் - (1941) - 770 - 1070 பாட்டுக்கள்.
6. Ibid - 2086 - 3066 பாட்டுக்கள்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Thirubuvanam.

I am very grateful to visit this so holy and interesting temple where I could see for the first time Thiru SARABA MOORTHY.

I take the opportunity to express my deep gratitude to the temple authorities who allowed me such a visit.

(Sd) F. Mutin,
Paris (France.)

# செய்திகள்

தருமையாதீனத்தில்

## ஆவணிமூல விழாவும், கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில், மதுரைச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கி வருவதை அனைவரும் அறிவர். ஆலவாய்ச் சொக்க லிங்கப் பெருமானுக்கு உகந்த திருநாள் ஆவணிமூலத் திருநாள். அன்று மணிவாசகருக்காகப் பிரம்படி பட்டும், வந்திக்காக மண்சுமந்தும் திருவிளையாடல் புரிந்தான் பெருமான். அவ் ஆவணிமூலத் திருநாளை யொட்டி பத்து நாட்களிலும் தருமையாதீனத்தில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெறும். இவ்வாண்டு 6—9—73 வியாழக்கிழமையன்று காலையில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆவணிமூலத் திருநாள் வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். மாலையிலும் சிறப்பாக வழிபாடு நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் பக்தர்கள் பலர்வந்து வழிபாட்டில் கலந்து கொண்டு வழிபட்டு ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பிரசாதமும் அருளாசியும் பெற்றனர். "புட்பபலன்" என்னும் நூல் விழா மலராக வெளியிடப்பெற்று வழங்கப்பெற்றது.

தருமையாதீனத்தில், ஆண்டுதோறும் ஆவணிமூலத் திருநாளில் கற்றறிந்த பேரறிஞர் ஒருவருக்குச் சிறப்புப்பட்டம் அளித்துப் பாராட்டப்பெறுகிறது. இவ்வாண்டில் திருச்சிராப்பள்ளி கவிஞர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களுக்குப் பட்டமளித்துப் பாராட்டுவதென ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவுளம்பற்றினார்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு நிகழ்ந்த மாலை வழிபாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களுக்கு ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் சந்நிதியில் பிரசாதம் அளித்துப் பொன்னாடை போர்த்தி "செந்தமிழ்க் கவிதைச் செம்மல்" என்ற சிறப்புப்பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கம் வழங்கி ஆசியருளினார்கள்.

அடுத்து திருநெறியதெய்வத்தமிழ் மன்றத்தில் ஆவணிமூலச் சிறப்பு விழாவும் கல்லூரி ஆண்டு விழாவும் புராணத் திருநாளாகத் தொடங்கி நிகழ்ந்தன. சென்னை தருமையாதீன சமயப்

பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றார்கள். வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மௌனத் தவம் பெருக்கும் நாள் ஆதலின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய பட்டமளிப்பு விழா ஆசியுரை ஒலிப்பதிவின் மூலம் ஒலிபரப்பப்பெற்றது. பின்னர் ஆதீனக் கல்வி நிலையங்களாகிய வேதசிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை, ஸ்ரீ குருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் பள்ளி, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு சைவசித்தாந்தக் கல்லூரி, ஆதீனப் பல்கலைக் கல்லூரிகளின் ஆண்டு அறிக்கைகள் படிக்கப்பெற்றன.

ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் பயின்று, சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெறும் மாணவர்க்கு, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவுப் பரிசாகப் பொற்பதக்கம் வழங்க ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பற்றினார்கள். அவ்வண்ணமே, திரு. மாதேசு என்ற மாணவர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருக்கரத்தால் பொற்பதக்கம் வழங்கப்பெற்றார். சைவசித்தாந்தக் கல்லூரியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிபெற்ற பன்னிரண்டு மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகளையும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் நினைவுப்பரிசாகிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துப் பரிசையும் மற்றும் பல பரிசுகளையும் கல்லூரி மாணவர்களுக்கும் பிற கல்வி நிலைய மாணவ மாணவியர்க்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினார்கள்.

தமிழ்மொழி பற்றி நிகழ்ந்த கல்லூரி மாணவர்களின் உரையாடலுக்குப் பின்னர், திருச்சிராப்பள்ளி, திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராசப்பிள்ளை, பி. ஏ., அவர்கள் தமது சிறப்புரையில் செந்தமிழ்க் கவிதைச் செம்மலைப் பாராட்டிப் பேசினார்கள். சேலம் பைந்தமிழ்ச் செல்வர் திரு. ச. சிவகுமாரன், எம். ஏ., அவர்கள் மீனாட்சியம்மை திருமணம் பற்றியும், செஞ்சொற் கொண்டல் டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பி. எச். டி. அவர்கள் "பரஞ்சோதி முனிவர் பாநலம்" பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர். இறை வணக்கத்துடன் விழா இனிது நிறைவுற்றது.

இவ் ஆவணிமூலவிழாவை ஒட்டி 4, 5—9—73 ஆகிய இரு நாட்களிலும் நிகழ்ந்த ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் கீழே தரப்பெறுகின்றன.

தருமையாதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் 4—9—73 செவ்வாய்க்கிழமை மாலை 2-45 மணி அளவில், வேத

சிவாகம பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி களின் ஆண்டு விழா தோத்திரத் திருநாளாக நடைபெற்றது. மாயூரம் டாக்டர். திரு. மு. சுவாமிநாதன், எம். பி., பி. எஸ். அவர்கள் மணிவாசகரின் திருவாசகப் பாடலில் ஒன்றை விளக்கிக்கூறிச் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து ஞானத் தமிழ் பற்றி திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் தொண்டுத் தமிழ் பற்றி திரு. வி. சபேசன் அவர்களும் நேயத் தமிழ் பற்றி திரு. இரா. செல்வக்கணபதி அவர்களும் சொற்பொழி வாற்றினார்கள்.

5—9—73 புதன்கிழமை மாலை 3 மணி அளவில் தேவார பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளிகளின் ஆண்டு விழா சாத்திரத் திருநாளாக நடைபெற்றது. மாயூரம் திரு. ஆர். இராஜசேகரன், பி. எஸ்ஸி., பி. எல். அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

அடுத்து, " சிவஞான போதத் திருநெறி " என்ற தலைப்பில் திரு. அ. கலியபெருமாள், எம். ஏ., அவர்களும், அருணந்தி தேவர் அருணெறி " என்ற தலைப்பில் திருநெறிச்செம்மல், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும், " சிவபோகசாரச் செந்நெறி " என்ற தலைப்பில் திருமதி. ப. நீலா அவர்களும் விரிவுரையாற்றிய பின்னர் இறைவணக்கத்துடன் விழா நிறைவுற்றது.

## சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

### தேனும்பேட்டையில் :

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 29—7—73 ஞாயிற்றுக் கிழமை அன்று சென்னை, தேனும்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிலைய அன்பர்கள் சுவாமி, அம்பாள் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகள் நிகழ்த்தினர். திரு. சு. ஞானப்பிரகாசம், திரு. N. இராமமூர்த்தி அய்யர், திரு. கபாலி ஓதுவார் ஆகியோர் திருமுறை, அபிராமி அந்தாதி பாராயணம் நிகழ்த்தினர்.

அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கயிலாய தரிசனம் செய்த ஆடி அமாவாசைத் திருநாளா தலின் கயிலைப் பதிகப்பாராயணமும் நிகழ்த்தப்பெற்றது. முறை யாக வழிபாடு நிகழ்த்திய பின்னர் குழந்தைகளுக்குப் பழங்களும் அன்பர்களுக்குப் பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

பின்னர் நிகழ்ந்த சமயப் பிரசாரக் கூட்டத்தில் சமயப் பிரசாரத்தின் நோக்கம் பற்றி, திரு. N. R. முருகவேள், திரு. V. N. ஆறுமுகம், திருமதி. மீனாட்சிசுந்தரசிவை ஆகியோர் சொற்பொழிவாற்றினர், கோயில் அறங்காவலர்களுக்கும், சிவாசாரியர்களுக்கும் நிலையத்தின் சார்பில், வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவின்றார்கள்.

### சைதாப்பேட்டையில் :

26—8—73 ஞாயிற்றுக்கிழமையன்று, சென்னை, சைதாப்பேட்டை ஸ்ரீ சௌந்தரேஸ்வரசுவாமி ஆலயத்தில் நிலைய மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. நிலைய அன்பர்கள் சுவாமி, அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகளுடன் முறையாக வழிபாடு நிகழ்த்தினர். பின்னர் நிகழ்ந்த சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டத்தில் திரு. ந. ரா. முருகவேள், திரு. V. N. ஆறுமுகம், புலவர். திரு. க. ஆறுமுகம், திரு. N சங்கரநாராயணன், திருமதி. மீனாட்சிசுந்தரசிவை, நிலைய வித்துவான் வகுப்பு மாணவர் கிருஷ்ணன் ஆகியோர் இறைவழிபாட்டின் இன்றியமையாமை பற்றியும், கூட்டு வழிபாட்டின் பயன் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

" கோயில் பெருமை " " வழிபாட்டால் உயிர்கள் அடையும் நன்மை " இவை பற்றிக் கூறி, வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவில இறை வணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை சமயப் பிரசார நிலையத்தில், வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 26—7—73 அன்று திரு. B, C இலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் கடவுள் முருகன். அப்பெருமானுக்குக்கிருத்திகையன்றுஅபிஷேகம்செய்த சந்தனக் குழம்பு, விபூதிப் பிரசாதம் நமக்குக் கிடைப்பது நாம் செய்த பேறு, அதை நாம் எல்லோரும் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக என்று தலைமையுரையில் தெரிவித்தார்கள். திரு. சு. ஞானப்பிரகாசம், திரு. M. இராமமூர்த்தி அய்யர், குமாரி கௌரி குழுவினர், வேளூர்த் தேவாரம், திருப்புகழ், நாமாவளிப் பாராயணம் நிகழ்த்தினர். நிலையம் ஸ்ரீமத் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். எல்லோருக்கும் சந்தனக் குழம்பு விபூதிப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

22—8—73 புதன் கிழமை திரு நல். முருகேச முதலியார் அவர்கள் தலைமையில் வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. திரு. ஞானப்பிரகாசம், புலவர். திரு. ந. இராமலிங்கம் பாராயணம் நிகழ்த்தினர்.

இங்கு முதன் முதல் நிகழ்ந்த கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவில் நான் தலைமையுரை ஆற்றினேன் என்றுகூறி வேலூர்த் தல வரலாறு சித்தாமிர்ததீர்த்தம், திருச்சாந் துருண்டை இவற்றின் பெருமைகளைத் தலைவர் அவர்கள் விளக்கினார்கள் விழா நிறைவில் சந்தனக்குழம்பு விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டது.

## நாயன்மார் குருபூஜை விழா,

**மாணிக்கவாசகர் :**

சைவ சமயாசாரியர்களுள் ஒருவரும் எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் - திருக்கோவையார் அருளிச்செய்தவருமாகிய மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜைவிழா, சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் 4—7—73 அன்று, மதுரை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. "மனிதப்பிறவி கிடைத்தற் கரிதானது. அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப இறைவன் இன்பதுன்பங்களை அருளுகிறான். நாடி சாத்திரம் மூலமாக முற்பிறவியின் நிலையை அறிந்து இறைவழிபாடு செய்து சமய தீக்ஷை பெற்று ஐந்தெழுத்தை ஓதினால் அவன் அருளைப்பெற்று இன்புற்று வாழலாம்" என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையுரையில் தெரிவித்தார்கள்.

அமுதமொழி அரசு திரு. N. சங்கரநாராயணன் "குருவருளும் திருவருளும்" என்ற தலைப்பிலும் திரு. C. துரைராஜ், B A, B.L. சைவ சமயத்தின் பெருமையையும் விளக்கிப் பேசினார்கள். ஸ்ரீமத் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூற விழா இனிது நிறைவெய்தியது.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள் :**

5—8—73 அன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா முன்னாள் உயர்மன்ற நீதிபதி திரு. R சதாசிவம், பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் சிறப்பாக நிகழ்ந்தது. "சுந்தரர்

] தொடர்ச்சி 570 ஆம் பக்கம் பார்க்க ]

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

( பிரமாதீசஸ்ரீ புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய )

( 17—9—73 முதல் 16—10—73 முடிய )

நிகழும் பிரமாதீசஸ்ரீ ஆவணிமீ 31உ ஞாயிற்றுக்கிழமை உதயாதி நாழிகை 50-35க்கு கடக லக்னத்தில் ஸ்ரீ லோகரக்ஷக ரான சூரிய பகவான் கன்னியாராசி பிரவேசம் செய்கிறார். டி பிரவேசகால பலன் உலகம் பூராவுக்கும் சுபிக்ஷமும் தன தான்ய விருத்தியும் ஏற்படும். விலைவாசிகளும் கொஞ்சம் கொஞ்சமாக விலை குறைந்து காட்டும், மாத பிரவேச காலத் தில் பிரவேசகால லக்னத்துக்கு 12-ல் சனி, கேது அமைந்து இருப்பதால் அதர்ம பூமிகளிலும் இந்தியாவுக்கு வெளி தேசங் களிலும் பலவிதமான மாறுதல்களையும் இயற்கைக் கோளாறுகளை யும் கொடுத்து அமைதிக் குறைவும் ஏற்படுத்தும். தக்ஷிணபார தத்தில் புண்ணிய பூமிகளில் விசேஷமான நன்மைகள் ஏற்படும். உலகம் சுபிக்ஷம் அடையும். சுபம் உண்டாகும் கடவுள் காப்பார்.

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். தூரதேச யாத்திரை ஏற்படும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் கிருகங் கள் கிரயவிக்ரயங்கள் ஏற்படும். ஆரோக்கியம் தரும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும், சுபமான பலனைத் தரும். ஜீவனம் விருத்தியாகும். இடம் மாறுதல் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாத்தியமாகும். படிப்பில் மேன்மை அடையச் செய்யும். புதன், வியாழன், சுபமாகும்.

**3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிக மான உழைப்பினால் எல்லாக் காரியங்களும் சாதிக்க முடியும்.

குடும்பத் தொல்லைகள் இருந்துகொண்டே இருக்கும். வரவு செலவு சமமாகும். எல்லாக் காரியங்களும் தவக்கத்தோடு நடக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். இல்லற சுகம் அதிகமாகும். கிரயம் விக்ரயம் ஏற்படும். புத்திராதிகளால் விசேஷமான நன்மை உண்டாகும். புதிதாகத் தொழில் பழக்கம் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஆரோக்யம் உண்டாகும். ஜீவனம் ஓங்கும். இல்லற சுகம் அதிகமாகும். படிப்பில் விருத்தி ஏற்படும். தெய்வ பக்தியால் சகலமான காரியங்களும் நடக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். எதிர்பாராத விசேஷ லாபம் கிடைக்கும். ஜீவனம் விருத்தியடையும். மங்களகரமான காரியங்கள் ஏற்படும். தேவதாபிரதிஷ்டை முதலிய விசேஷமான பூஜைகளும், தேவதா ஆராதனங்களும் அதிகமாக நடக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். அதிகமான உழைப்பினால் விசேஷ லாபம் உண்டாகும். தெய்விகமான காரியங்கள் புதிதாக ஏற்படும். நஷ்டமான பொருள் தானுக வந்துசேரும். உலக பிரசித்தி ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். ஜீவனம் ஓங்கும். உறவினர்களால் விசேஷ நன்மை ஏற்படும். படிப்பு விருத்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத் தரும். உழைப்பு அதிகமாகும், வியாதி நிவர்த்தியாகும். தூரதேச யாத்திரை ஏற்படும். உறவினர்களும், சிநேகிதர்களும் அடிக்கடி வந்துகொண்டு இருப்பார்கள்.

**10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம்**

மகரராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிக மான உழைப்பும் தொல்லைகளும் இருந்துகொண்டு இருக்கும். ஜீவனம் ஓங்கும். இல்லற சுகம் அதிகமாகும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் -பூரட்டாதி-¾**

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். உழைப்பு அதிகமாகும். தெய்வீகமானகாரியங்கள் அதிகமாகும். புத்திராதிகளால் விசேஷமான நன்மை ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். வரவு செலவு சமமாக இருக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி**

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத் தரு . தெய்விகமான காரியங்கள் அதிகமாகும். அனேகவிதமான ஜீவனம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். சுப காரியங்கள் அடிக்கடி நடந்துகொண்டு இருக்கும். சுபம் உண்டாகும்.

குறிப்பு:- நாளது வருஷம் புரட்டாசிமாதம் 11ம் தேதி (27—9—73) வியாழக்கிழமை அன்று ஸ்ரீ சாரதா நவராத்ரீ மஹோத்ஸவம் ஆரம்பமாகிறது. உலகம் முழுவதும், ஆஸ்திக ஸஜ்ஜனங்கள் மேலோர் பெரியோர்கள் எல்லோரும் உலக க்ஷேமத்தின்பொருட்டு, ஆங்காங்கு நவராத்ரி தேவி பூஜையுடன் மஹாநவமி அன்று ஸ்ரீ சண்டீ யக்ஞம் நடத்திக்கொள்ள உலகம் சுபிக்ஷம் அடையும். பிரஜைகள் சந்தோஷம் அடைவார்கள். சுபம் உண்டாகும்.

---

[ 567 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

அருளிய பாடல்கள் நாமும் ஆண்டவனை அடைந்து இன்புற்று வாழ வழிகாட்டியாக உள்ளன. தவறு செய்தவர்கள் யாராயிருந்தாலும் இறைவன் தண்டிப்பான் என்பதைச் சுந்தரர் வரலாறு விளக்குகிறது. என்று தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

திரு. தெ. ஞானசுந்தரம் M. A., திரு. N. R. முருகவேள் ஆகியோரின் விரிவுரைக்குப் பின்னர் ஸ்ரீமத். சுவாமிகள் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.